# நிதி ஆணைக்குழுவின்

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2025

**செலவினத் தலைப்பு இல. 011**

நிதி ஆணைக்குழு
*இல.03, சரண மாவத்தை, ராஜகிரிய*

## பொருளடக்கம்


| **உள்ளடக்கம்** | **பக்க இல.** |
|---|---|
| *அத்தியாயம் - 01: நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு* | *1* |
| *அத்தியாயம் - 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்* | *9* |
| *அத்தியாயம் - 03: 2025 டிசம்பர் 31ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை* | *36* |
| *அத்தியாயம் - 04: செயலாற்றுகைக் குறிகாட்டிகள்* | *49* |
| *அத்தியாயம் - 05: நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடையும் செயலாற்றுகை* | *50* |
| *அத்தியாயம் - 06: மனிதவள விபரம்* | *54* |
| *அத்தியாயம் - 07: இணக்க அறிக்கை* | *57* |

## *அத்தியாயம் - 01: நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு*

### *1.1. அறிமுகம்*

#### *1.1.1. பின்னணி*

*அதிகாரப் பன்முகப்படுத்தலின் மூலம் மாகாண சபைகளை தாபிப்பதற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு 1987 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 154ண அரசியலமைப்பின் கீழ் நிதி ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்குப் போதுமான நிதி அரசின் வருடாந்த பாதீட்டினால் பகிர்ந்தளிப்பதற்காக அரசிற்கு பரிந்துரைகளை முன்வைப்பதும், மாகாணங்களுக்காக அரசினால் வருடாந்தம் மானியமாக வழங்கப்படும் நிதி, நாட்டினுள் சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்கத்துடன் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும் மாகாணங்களின் நிதி நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்படும் சில விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பது நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள முதன்மைப் பணியாகும். அதற்கமைய, மாகாணங்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக மாகாண சபைகளினால் முன்னெடுக்கப்படும் சேவை வழங்களுக்குத் தேவையான வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதற்காக மாகாணங்களுக்கு நியாயமான வகையில் வளங்களை பகிர்ந்தளிக்கும் செயன்முறைக்குள் நிதி ஆணைக்குழுவானது மிக முக்கியமான பொறுப்பொன்றினை நிறைவேற்றுகின்றது.*

#### *1.1.2. நிதி ஆணைக்குழுவினது ஆணை*

*இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154ண மூலம் நிதி ஆணைக்குழுவானது தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் செயற்பாடுகளையும் விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3), (4) மற்றும் (5) ஆகியவற்றில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு, நிதி ஆணைக்குழுவின் ஆணை பின்வருமாறு.*

***உறுப்புரை 154ண (3)** : மாகாணங்களின் தேவைகளைச் நிவர்த்தி செய்யும் நோக்கத்திற்காக, பொதுவான அத்தகைய நிதியங்களை அரசாங்க ஆணைக்குழுவின் விதப்புரை மீதும் அதன் கலந்தாலோசனையுடனும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்குதல் வேண்டும்.*

***உறுப்புரை 154ண (4)** : பின்வருவன பற்றி சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்தல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும் என்பது –*

*அ) மாகாணங்களின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினால், ஆண்டு தோறும் வழங்கப்படும் நிதிகள், எந்நெறிகளின் மூலம் பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பங்கிடப்படுதல் வேண்டுமோ அந்நெறிகள் பற்றியும் : அத்துடன்*

*ஆ) மாகாண நிதி தொடர்பாக சனாதிபதியினால் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம் பற்றியும்,*

***உறுப்புரை 154ண (5)** : ஆணைக்குழு, நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கத்துடனான அத்தகைய நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க பின்வருவனவற்றை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-*

*அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை*

*ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்*

இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை : அத்துடன்

ஈ) ஒவ்வொரு மாகாணத்திற்குமுள்ளேயான தலா வருமானத்திற்கும், மாகாணங்களுக்கிடையிலான அதியுயர் தலா வருமானத்திற்குமிடையேயான வேறுபாட்டினை படிப்படியாகக் குறைப்பதற்கான தேவைப்பாட்டினை கருத்திற்கொள்ள வேண்டும்.

*நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற பின்னர், கௌரவ ஜனாதிபதி அவர்களால் நடைமுறைப்படுத்துவதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஒப்புதலைப் பெறுவதற்காகவும் அப்பரிந்துரைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அதன்பின்னர், அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (7) இன் பிரகாரம், கௌரவ ஜனாதிபதி அவர்களினால் அப்பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீதான நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

### *1.1.3. நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்*

*அரசியலமைப்பின் 154ண உபபிரிவின் உறுப்புரை (1) இற்கமைய, நிதி ஆணைக்குழுவானது கீழ்வருமாறு ஐந்து அங்கத்தவர்களால் அமைக்கப்பட வேண்டும்.*

*(அ) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்;*

*(ஆ) திறைசேரியின் செயலாளர்; மற்றும்*

*(இ) மூன்று பிரதான சமுதாயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குச் சனாதிபதியினால் (அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் நிதி, சட்டம், நிருவாகம், தொழில் அல்லது கற்றல் துறைகளில் சிறப்பெய்தியுள்ள அல்லது உயர் பதவி வகித்துள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.)*

*அதற்கமைய, நிதி ஆணைக்குழுவின் தற்போதைய அங்கத்தவர்கள் பின்வருமாறு.*

*i. திரு.சுமித் அபேசிங்ஹ - தலைவர்*
*ii. கலாநிதி பி. நந்தலால் வீரசிங்ஹ - அங்கத்தவர் (பதவி வழி) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்*
*iii. கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும - அங்கத்தவர் (பதவி வழி) மற்றும் திறைசேரியின் செயலாளர்*
*iv. திரு. எம்.வாமதேவன் - அங்கத்தவர்*
*v. திரு.டீ.நலீன் ஒஸென் - அங்கத்தவர்*

### *1.2. நிதி ஆணைக்குழுவின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்*

**தொலைநோக்கு:**

*சமநிலையான பிராந்திய அபிவிருத்தியுடன் கூடிய ஒரு சுபீட்சமான இலங்கை*

***பணிக்கூற்று*:**

*நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைவதன் பொருட்டு தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும்; மாகாண நிதிப்பகிர்விற்கான கொள்கைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல்.*

***நிதி ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்***

1. *அரசியலமைப்பினால் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்.*

2. *மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதியை பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக பரிந்துரைகளை மேற்கொள்ளல்.*

3. *சமமான பிராந்திய அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு மாகாணங்களுக்கிடையே நிதி வளத்தினை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.*

4. *பகிர்ந்தளிக்கப்பட்ட மானிய நிதியானது விவேகத்துடன் செலவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை அனுப்புதல்.*

## ***1.3. நிதி ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் முதன்மைச் செயற்பாடுகள்***

*மேலே 1.1.2 இன்படி, அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3), (4) மற்றும் (5) இற்கமைய, நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுகையில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.*

i. *மாகாணங்களின் வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பிடும் செயற்பாட்டிற்காக தகவல்களை முன்வைப்பது தொடர்பில் மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.*

ii. *மாகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை ஆராய்ந்து மாகாண அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடலினை மேற்கொண்ட பின்னர் குறித்த தேவைகளை மதிப்பிடல்.*

iii. *மாகாணங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யப் போதுமான நிதியினை வருடாந்த பாதீட்டினால் ஒதுக்குவதற்காக அரசிற்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.*

iv. *மாகாணங்களின் தேவைகளுக்காக அரசினால் வழங்கப்படும் நிதியினை ஒன்பது மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கையில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் தொடர்பில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.*

v. *வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படும் நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் மற்றும் மாகாணங்களின் பல்வேறு துறைகளுக்காகப் பகிர்ந்தளித்தல்.*

vi. *செயற்திறன் மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமான நிதிப் பயன்பாட்டினை நோக்கமாகக் கொண்டு வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடல்.*

vii. *தொடர்புபட்ட உரித்தாளர்களினது பங்குபற்றலுடன் மாகாண அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குதல்.*

viii. *மாகாண ஆளணி முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.*

### *1.4. நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் பிரதான பிரிவுகள்*

*நிதி ஆணைக்குழுவின் முதன்மைப் பணிகளை முன்னெடுப்பதற்கு பின்வரும் செயற்பாட்டு மற்றும் துணைப் பிரிவுகளுடன் நிதி ஆணைக்குழு கட்டமைக்கப்பட்டுள்ளது.*

- *கொள்கை, கற்கைகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு*
- *மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு*
- *மாகாண வருமானங்கள், மாகாண மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு*
- *நிர்வாகப் பிரிவு*
- *கணக்கீட்டுப் பிரிவு*
- *உள்ளக கணக்காய்வுப் பிரிவு*

#### *1.4.1. நிதி ஆணைக்குழு அலுவலகப் பிரிவுகளின் செயற்பாடுகள்*

**அ. கொள்கை , கற்கைகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவு**

1. *கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு நிதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளைத் தயாரிக்கும் செயற்பாட்டின் போது ஆணைக்குழுவிற்கு உதவுதல்.*
2. *மாகாணங்களுக்கிடையே நிதிப்பகிர்வு செய்வது தொடர்பான கொள்கை ரீதியிலான வழிமுறையினைத் தயாரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு உதவுதல்.*
3. *நிதி ஆணைக்குழுக் கூட்டங்களை நடாத்துகையில் தேவையான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.*
4. *பன்முகப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.*
5. *நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்திடம் முன்வைத்தல்.*
6. *வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்காக நிதி ஆணைக்குழுவினது முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திடம் முன்வைத்தல்.*
7. *தேவைக்கேற்ப ஏனைய இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கைகளைத் தயாரித்தல்.*

**ஆ. மாகாண அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு**

1. *வருடாந்த மாகாண மூலதனத் தேவைகளை முன்வைப்பது தொடர்பாக மாகாண சபைகளுக்கான வழிகாட்டல்களை வெளியிடல்.*
2. *நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளடக்குவதற்காக மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பிடல் மற்றும் தேசிய பாதீட்டிலிருந்து குறித்தொதுக்கப்பட்ட நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.*
3. *ஒவ்வொரு மாகாணத்திற்கும் குறித்தொதுக்கப்பட்ட மூலதன நிதியினை பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.*

4. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

5. பராமரிப்பு செயல்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அதனை செயற்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்கள், மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய மானிய நிதியின் கீழ் விசேட கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்களை வெளியிடல்.

6. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குதல்.

**இ. மாகாண வருமானங்கள், மாகாண மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு**

1. மாகாண மீண்டெழும் தேவைகளை முன்வைப்பதற்காக மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.

2. ஒவ்வொரு மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண அதிகார சபைகள் ஆகியவற்றின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்காக அரசினால் ஒதுக்கப்படும் மானிய நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.

3. மாகாண வருமானத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் வருமான இலக்குகளை நிர்ணயித்தல்.

4. மாகாணங்களின் தேவைகளுக்கேற்ப பொதுத் திறைசேரிக்கு மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைத்தல்.

5. மாகாணத் தேவைகளுக்கான கட்டுநிதியினை விடுவிப்பதில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு செயற்படல்.

6. மாகாண ஆளணியினரை நிர்ணயிப்பதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு செயற்படல்.

**ஈ. நிர்வாகப் பிரிவு**

1. நிதி ஆணைக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் தனிப்பட்ட கோப்பு தொடர்பான விடயங்கள் –சம்பள உயர்வினை பரிந்துரைத்தல் மற்றும் அங்கீகரித்தல், செயலாற்றுகை மதிப்பீடு, உரிய உத்தியோகத்தர்களின் சொத்து மற்றும் கடப்பாடுகள் வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல், விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள், ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள் மற்றும் இறப்புப் பணிக்கொடை தொடர்பான விடயங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் தொடர்பான விடயங்கள்

2. விடுமுறை தொடர்பான விடயங்கள் - உத்தியோகத்தர்களினதும் நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை தொடர்பான விடயங்கள், சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற கற்கை விடுமுறை தொடர்பான விடயங்கள், அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் ஏனைய அரச சுற்றறிக்கைகளுக்கு அமைவாக ஏனைய விடுமுறை தொடர்பான விடயங்கள்

3. அலுவலகத்தினது தேவையான பராமரிப்பு தொடர்பான விடயங்கள் – நீர், மின்சாரம், தொலைபேசி, இணையம், பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை மற்றும் கட்டட பராமரிப்புச் சேவை

4. அனைத்து கொடுப்பனவுகளையும் அங்கீகரித்தல் – சம்பளம், பட்டதாரி பயிற்சிப் படி, மேலதிக நேரம், ஈட்டிக் கொள்வதன் அடிப்படையில் செலுத்தப்படும் சம்பளத்தின் நான்கில் ஒன்றிற்கான கொடுப்பனவினை செலுத்துதல் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

5. ஆணைக்குழு அங்கத்தவர்களினது அனைத்து நிர்வாக நடவடிக்கைகள்

6. உத்தியோகத்தர்களின் கடன் தொடர்பான நடவடிக்கைகள் – இடர் கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணம், சொத்துக்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பான விடயங்கள்.

7. மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சிகள் – உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களை அனுப்பி வைத்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் ஏற்பாடு செய்தல்.

8. ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் – உரிய நேரத்தில் அறிக்கைகளை அனுப்புதல்

**உ. கணக்கீட்டுப் பிரிவு**

1. நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின்படி நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன வரவுசெலவு தொடர்பான நிதி முகாமைத்துவம்.
2. பெறுகை தொடர்பான செயற்பாடுகளின் செயலாற்றுகை.
3. நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் சொத்து முகாமைத்துவம்.
4. வருடாந்த நிதிக்கூற்றுக்களையும், வரவுசெலவு மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்.
5. அரச அதிகாரிகளின் முற்பண "பி" கணக்கை நிச்சயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் பராமரித்தல் மற்றும் அவற்றின் வருடாந்த இணக்கக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.
6. நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய உள்ளக மற்றும் பொது கணக்காய்வு விடயங்கள் மற்றும் அரச கணக்கு நடவடிக்கைகளுடன் தொடர்புபடல்.

**ஊ. உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

1. வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.

2. நிதி ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்காக வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் முகாமை செய்வதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிடல் மற்றும் அத்தகைய கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதற்கான நற் பிரயோகங்களை பரிந்துரை செய்தல்.

3. கொள்கைகள், நடைமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிதி ஆணைக்குழுவினது அலுவலகத்தின் தொழிற்பாட்டு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளினது இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளல் மற்றும் முன்னேற்றத்துக்கான பரிந்துரைகளை வழங்குதல்.

## *1.5. நிறுவனக் கட்டமைப்பு*




| | | | |
|---|---|---|---|
| பிப./உப | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | தொ.உ | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| நி.உ | நிர்வாக உத்தியோகத்தர் | த.தொ.தொ.உத | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் |
| மொ.பெ | மொழிபெயர்ப்பாளர் | மு.சே.உ | முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் |
| த.தொ.தொ.உ | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | மி.தொ | மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் |
| பு.உ | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் | அ.ஊ | அலுவலக ஊழியர் |
| அ.உ | அபிவிருத்தி உத்தியோகத்தர் | | |

### *1.6. நிதி ஆணைக்குழுவின் கீழ்வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்*

*நிதி ஆணைக்குழுவின் கீழ் எந்தவொரு நிறுவனமும் தாபிக்கப்படவில்லை. நிதி ஆணைக்குழுவானது அரசியலமைப்பின் 41ஆ பிரிவின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுயாதீனமான ஆணைக்குழுக்களுள் ஒன்றாகும்.*

### *1.7. வெளிநாட்டு நிதியுதவியின் கீழான கருத்திட்டங்களின் விபரங்கள் (ஏதும் இருப்பின்) :*

*நிதி ஆணைக்குழுவினால் எந்தவொரு வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.*

| | |
|---|---|
| *அ) கருத்திட்டத்தின் பெயர் :* | பொருத்தமற்றது |
| *ஆ) நன்கொடை வழங்கும் முகவர் :* | |
| *இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட தொகை – ரூ. மில். :* | |
| *ஈ) கருத்திட்ட காலம்* | |

## *அத்தியாயம் - 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்*

### *2.1. முன்னேற்றம்*

*நிதி ஆணைக்குழுவினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் நியதிகளுக்கிணங்க மற்றும் செயல்திட்ட கால சட்டகத்திற்கேற்ப கீழ்வரும் முக்கிய செயற்பாடுகளை 2025 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றியது.*

#### *2.1.1. மாகாண மூலதன பாதீட்டுடன் தொடர்புடைய விடயங்கள்*

***I. 2026 ஆம் ஆண்டிற்கான மூலதனத் தேவைகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மாகாண சபைகளுக்கு வெளியிடல்***

*2026 ஆம் ஆண்டிற்கான மாகாண மூலதனத் தேவைப்பாடுகளை தயாரித்தல் மற்றும் முன்வைப்பதற்கான வழிகாட்டல்கள் 2025 பெப்ரவரி 11 ஆந்திகதி அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் வெளியிடப்பட்டது. நிதி ஆணைக்குழு அதன் அரசியலமைப்பு ஆணையின் பிரகாரம் மாகாண சபைகளுக்கான எதிர்வரும் ஆண்டின் மூலதன செலவினத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியினை வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக பரிந்துரைகளை முன்வைப்பதற்கு வருடாந்தம் மாகாண சபைகளினது நிதித் தேவைப்பாடு மதிப்பிடப்படுகின்றது. மாகாண சபைகளினது மூலதன வடிவிலான செலவினங்களுக்காக வருடாந்த வளத் தேவைப்பாட்டினை தர்க்கரீதியாக தயாரித்து முன்வைப்பதற்காக இவ்வழிகாட்டல்கள் துணைபுரிகின்றன.*

***II. 2025 வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல்***

*நிதி ஆணைக்குழுவினால் 2024 டிசம்பர் 29 ஆந்திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் (ADPs) ஒன்பது மாகாண சபைகளினாலும் நிதி ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.*

*அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் ஆழ்ந்த கற்கைக்கு உட்படுத்தப்பட்டதோடு, அத்திட்டங்களில் தேவையான இடங்களில் தெளிவுபடுத்திக்கொள்ளல் மற்றும் தேவையான மேலதிகத் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக நிகழ்நிலை தொழில்நுட்பத்தினூடு விரிவான கலந்துரையாடல் தொடரொன்று நடத்தப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் தலைவரின் தலைமையுடன், நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள், ஆணைக்குழுவின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம் , தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் மாகாணங்களின் கௌரவ ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் ,பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல் மற்றும் நிதி), திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண சபைகளின் ஏனைய தொடர்புடைய சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இக்கூட்டம் நடைபெற்றது.*

*2025 ஆம் ஆண்டின் முதலாவது தவணை நிறைவடைகையில் அனைத்து வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களும் மீளாய்வு செய்து நிறைவடைந்ததுடன் மீளாய்வுக் கூட்டங்களின் போது ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கண்காணிப்புக்களின்படி தேவையான திருத்தங்களுக்குட்பட்டு ஒவ்வொரு திட்டத்தினதும் பரந்த செயற்பாட்டு எல்லைகள் வரையில் கொள்கை ரீதியான ஒப்புதல் வழங்கப்பட்டது.*

*வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற தினங்கள், மீளாய்வுக் கூட்டங்கள் நிகழ்ந்த தினங்கள் மற்றும் அத்திட்டங்களுக்காக ஒப்புதல் வழங்கப்பட்ட தினங்கள் தொடர்பிலான தகவல்கள் கீழ்வருமாறு.*

***அட்டவணை 01: 2025 ஆம் ஆண்டிற்கு மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட தினங்கள்***

| ***மாகாணம்*** | ***வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கப்பெற்ற தினங்கள்*** | ***மீளாய்வுக் கூட்டங்கள் இடம்பெற்ற தினங்கள்*** | ***திட்டங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்ட தினங்கள்*** |
|---|---|---|---|
| மேல் | *2025.02.20* | *2025.03.21* | *2025.04.02* |
| மத்திய | *2025.03.04* | *2025.03.28* | *2025.04.11* |
| தென் | *2025.02.13* | *2025.03.06* | *2025.03.29* |
| வட | *2025.02.13* | *2025.03.11* | *2025.03.29* |
| வடமேல் | *2025.02.24* | *2025.03.19* | *2025.04.01* |
| வட மத்திய | *2025.02.18* | *2025.03.18* | *2025.04.01* |
| ஊவா | *2025.02.19* | *2025.03.25* | *2025.04.03* |
| சப்ரகமுவ | *2025.02.24* | *2025.03.12* | *2025.03.29* |
| கிழக்கு | *2025.02.14* | *2025.03.14* | *2025.03.29* |

***III. 2025 மாகாண பராமரிப்பு செயல்திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல்***

*அரசின் மட்டுப்படுத்தப்பட்ட நிதி அவகாசத்தினுள் மாகாணங்களின் மூலதன சுபாவத்திலான செலவுகளை ஈடுசெய்துக்கொள்வது சவாலாகக் காணப்படுவதால், எதிர்காலத்தில் தேவையற்ற வகையில் புனர்நிர்மாணங்களுக்காக பாரியளவு செலவுகளை மேற்கொள்வதைத் தவிர்த்து நடைமுறையில் காணப்படும் மாகாண மூலதன சொத்துக்களை சரியானவாறு பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்குப் போதியளவு நிதியினை ஒதுக்கித் தருமாறு நிதி ஆணைக்குழுவினால் பொது திறைசேரிக்கு முன்மொழியப்பட்டது. அதற்கமைய, மூலதன சொத்துக்களைப் பராமரிப்பதற்காக ஒவ்வொரு மாகாண சபைகளினதும் மீண்டெழும் செலவினத்தின் கீழ் வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு ஆணைக்குழு பரிந்துரையினை முன்வைத்தது.*

*இப்பரிந்துரைக்கு பதிலளிக்கும் விதமாக, மாகாண மூலதன சொத்துக்களின் பராமரிப்பிற்காக 25,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டினை திறைசேரி 2025 வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கியது. அதற்கமைய, முக்கியமான துறைகளுக்காக பராமரிப்பு செயல்திட்டங்களை தயாரிப்பது தொடர்பிலான வழிகாட்டல்கள் நிதி ஆணைக்குழுவினால் 2024 டிசம்பர் 31 ஆந்திகதி வெளியிடப்பட்டதுடன் அவ்வழிகாட்டல்களுக்கமைய தயாரிக்கப்பட்ட பராமரிப்பு செயல்திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்காக மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்டன.*

*அதற்கமைய பராமரிப்பு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்ட தினங்கள் கீழ்வருமாறு.*

***அட்டவணை 02: பராமரிப்பு செயல்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஒப்புதல் வழங்கப்பட்ட தினங்கள்***

| மாகாணம் | பராமரிப்பு செயல்திட்டம் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற தினம் | ஒப்புதல் வழங்கப்பட்ட தினம் |
|---|---|---|
| மேல் | 2025.04.25 | 2025.04.29 |
| மத்திய | 2025.03.04 | 2025.04.10 |
| தென் | 2025.04.17 | 2025.04.29 |
| வட | 2025.02.20 | 2025.04.10 |
| வடமேல் | 2025.02.28 | 2025.04.10 |
| வட மத்திய | 2025.02.19 | 2025.04.10 |
| ஊவா | 2025.04.09 | 2025.04.10 |
| சப்ரகமுவ | 2025.04.03 | 2025.04.10 |
| கிழக்கு | 2025.02.14 | 2025.04.10 |

### IV. 2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வெளியிடல்.

*2025 ஆம் ஆண்டில் பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கும் 32 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடொன்று பாதீட்டினால் ஒதுக்கப்பட்டது.அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் 2025 ஜனவரி 09 ஆந்திகதி மாகாண சபைகளுக்கு வெளியிடப்பட்டது. இவ்வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டதன் நோக்கமாகவிருந்தது யாதெனில், பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தொடர்புடைய ஏனைய துறைகளுக்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டினை செயல்திறனுடனும் வினைத்திறனுடனும் ஒருங்கிணைத்து பயன்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை காண்பிப்பதாகும். இங்கு பாடசாலை மாணவர்களுக்கு மிகச்சிறந்த போசாக்கான உணவு வேளையொன்றினை வழங்குவதன் மூலம் அவர்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்துவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய மாகாண சபைகளினால் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

### V. விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பது தொடர்பிலான வழிகாட்டல்களை வெளியிடல் – 2025

*விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக 2025 ஆம் ஆண்டில் மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் (PSDG) கீழ் வழங்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் 2025.01.24 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது. மேலும், விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பது தொடர்பாக மாகாண அதிகாரிகளை விழிப்புணர்வூட்டும் கூட்டமொன்று ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளரின் தலைமையுடன் மாகாண பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்) மற்றும் மாகாண நிறுவனங்களின் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் 2025 ஜனவரி 31 ஆந்திகதி நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் நடத்தப்பட்டது. வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க இவ்வாறான கருத்திட்டங்களை*

*செயற்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் உரிய கருத்திட்டங்களை அடையாளம் கண்டு முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கு மாகாண சபைகளுக்குத் தேவையான மேலதிக அறிவுறுத்தல்கள் இக்கூட்டத்தின் போது வழங்கப்பட்டது.*

***VI. கிளீன் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித்திட்டம்***

*2025 ஆம் ஆண்டில் "கிளீன் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனைத்து மாகாண சபைகளினதும் கல்விப்பிரிவு மற்றும் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி பிரிவிற்காக சனாதிபதி செயலகத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு கூறுகளை செயற்படுத்தும் போது தேவைப்படும் வழிகாட்டல்களை மாகாண சபைகளுக்கு வழங்கும் செயற்பாடும் நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.*

***(அ) "கிளீன் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டம் – மாகாண பாடசாலைகள் பிரிவு***

*மாகாண பாடசாலைகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கருத்திட்டங்களையும் செயற்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்தினால் "கிளீன் ஸ்ரீ லங்கா "நிகழ்ச்சித்திட்டம் – 2025 இன் கீழ் 760 மில்லியன் ரூபாய் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.*

i. *மாகாணப் பாடசாலைகளில் பாதுகாப்பான கற்றல் சூழலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு – 250 மில்லியன் ரூபாய்*

ii. *வசதியான கற்றல் சூழலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட மாகாண பாடசாலைகளின் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் – 500 மில்லியன் ரூபாய்*

iii. *"கிளீன் ஸ்ரீ லங்கா" எண்ணக்கருவிற்கமைய பாடசாலை சமூகத்தினரிடையே எண்ணக்கரு மற்றும் ஒழுக்கக் கோவையினை இலக்காகக் கொண்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் – 10 மில்லியன் ரூபாய்*

*மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை ஒன்பது மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டினை நிதி ஆணைக்குழு மேற்கொண்டதோடு, செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மாகாண சபைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நிதி ஆணைக்குழுவினால் 2025 ஏப்ரல் 29 ஆந்திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக அனைத்து மாகாண சபைகளினாலும் செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மீளாய்வுக் கூட்டமொன்று அனைத்து மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள், கல்வி அமைச்சு, சனாதிபதி செயலகம் (கிளீன் ஸ்ரீ லங்கா செயலகம்), தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்) மற்றும் ஏனைய மாகாண அதிகாரிகளின் பங்குபற்றலுடன் 2025 மே 20 ஆந்திகதி நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் நடத்தப்பட்டது. முன்வைக்கப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக2025 மே 23 ஆந்திகதி கொள்கை ரீதியிலான ஒப்புதல் வழங்கப்பட்டது.*

***(ஆ) "கிளீன் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டம் – உள்ளூராட்சிப் பிரிவு (மேல் மாகாணம்)***

*2025 ஆம் ஆண்டில் "கிளீன் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில், உள்ளூராட்சிப் பிரிவிற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக 432.6 மில்லியன் ரூபாய் நிதித்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.*

i. *உக்கலடையா கழிவுகளை சேகரித்தல் மற்றும் தயாரித்தலுக்காக புதிய செயற்பாட்டு நிலையமொன்றினை அபிவிருத்தி செய்தல் (மீள்சுழற்சி மையமொன்று) – கரதியான 222.6 மில்லியன் ரூபாய்*

ii. *திண்மக்கழிவினைப் பயன்படுத்தி கொம்போஸ்ட் தயாரிக்கும் அலகுகளை நிர்மாணித்தல் – கரதியான 100 மில்லியன் ரூபாய்*

iii. *மாளிகாவத்தை பிரதேசத்தில் கழிவுநீர் வடிகாலமைப்பொன்றினை நிர்மாணித்தல் – 50 மில்லியன் ரூபாய்*

iv. *நடமாடும் CCTV அமைப்பொன்றினால் கண்காணித்து சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தல் – 10 மில்லியன் ரூபாய்*

v. *மேல் மாகாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு வாகனங்களில் மேற்கொள்ளப்படும் 10 நடமாடும் நூலகங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் – 50 மில்லியன் ரூபாய்*

*நிதி ஆணைக்குழுவினால் 2025 மே 22 ஆந்திகதி இவ்வொதுக்கீடுகளுக்கான செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க, மேல் மாகாண சபையினால் மேலே (i), (ii) மற்றும் (iii) கருத்திட்டங்களுக்காக செயற்பாட்டுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டது.*

*அதற்கமைய, மேல் மாகாண சபை, மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபை மற்றும் கொழும்பு மாநகர சபையின் அதிகாரிகளினதும், சனாதிபதி செயலகம் (கிளீன் ஸ்ரீ லங்கா செயலகம்), தேசிய திட்டமிடல் திணைக்களம் , தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அதிகாரிகளினதும் பங்குபற்றலுடன் 2025 யூன் 18 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர், மேலே (i), (ii) மற்றும் (iii) கருத்திட்டங்களினது செயற்பாட்டுத் திட்டங்களுக்காக 2025 யூன் 20 ஆந்திகதி கொள்கை ரீதியிலான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேல் மாகாண சபையினால் (iv) மற்றும் (v) கருத்திட்டங்களுக்காக முன்வைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களை மீளாய்வு செய்த பின்னர் 2025 யூலை 01 ஆந்திகதி அதற்கான கொள்கை ரீதியிலான ஒப்புதல் வழங்கப்பட்டது.*

## *VII. 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண மூலதன தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்தல்*

*மாகாண மூலதன தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல், அரசியலமைப்பின் 154ண (3) மற்றும் (4) உறுப்புரைகளின் கீழ் அரசாங்கத்திற்கும் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும் அதற்குரிய பரிந்துரைகளை முன்வைப்பதற்கான முதன்மைத் தேவைப்பாடாகும்.*

*நிதி ஆணைக்குழுவினால் 2025 பெப்ரவரி 11ஆந்திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க அனைத்து மாகாண சபைகளினாலும் 2026 இற்கான தனது மூலதன தேவைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.*

*மாகாணங்களினால் மூலதன தேவைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட திகதிகள் கீழ்வருமாறு.*

***அட்டவணை 03: மாகாண மூலதனத் தேவைகள் முன்வைக்கப்பட்ட தினங்கள்***

| **மாகாணம்** | **மாகாண மூலதன தேவைப்பாடு கிடைக்கப்பெற்ற தினம்** |
|---|---|
| மேல் | 2025.05.15 |
| மத்திய | 2025.06.05 |
| தென் | 2025.04.04 |
| வட | 2025.03.26 |
| வடமேல் | 2025.05.22 |
| வட மத்திய | 2025.04.03 |
| ஊவா | 2025.05.16 |
| சப்ரகமுவ | 2025.04.29 |
| கிழக்கு | 2025.02.15 |

*மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட விடயங்கள் 23 இற்காக பயன்படுத்தும் நோக்கத்துடன், 2026 ஆம் ஆண்டிற்கான மூலதன செலவினத் தேவைப்பாடு மதிப்பிடப்பட்டது. மேலும், அரசாங்கத்தினது வருடாந்த பாதீட்டினால் வழங்கப்படும் ஒதுக்கீடானது நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்குடன் தர்க்க ரீதியான முறையில் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவியுடன் நிதி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியிலான புள்ளிவிபரச் சூத்திரமொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.*

### *VIII. 2026 வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல்*

*2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதனை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் 2026 வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களைத் (ADPs) தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் 2025 ஒக்டோபர் 07 ஆந்திகதி முன்கூட்டியே (கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில்) வெளியிடப்பட்டது. எதிர்வரும் வருடத்திற்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மாத்திரம் ஒதுக்கீடு தொடர்பான தகவல்கள் மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டதால் கடந்த வருடங்களில் மாகாண அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதங்களை விலக்கிக்கொள்ளும் நோக்குடன் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டது.*

*2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது பொதுமக்களுக்கு உச்ச பெறுபேற்றினை வழங்கி வினைத்திறனான/ செயல்திறன் மிக்கதான பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கு இவ்வழிகாட்டல்கள் மூலம் அறிவுறுத்தப்படுகின்றது. இவ்வபிவிருத்தித் திட்டங்கள், மாகாண சபைகளினது நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களுக்கமைவாக , நடைமுறை அரசாங்கத்தினது தேசிய கொள்கை சட்டகத்திற்கு அமைவாக மற்றும் நாட்டினதும் குறிப்பாக ஒவ்வொரு மாகாணத்தினதும் அபிவிருத்தி முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

### *IX. பராமரிப்பு செயற்திட்டம் 2026 இனை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள்*

*மாகாண மூலதனச் சொத்துக்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 27,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடொன்று பொது திறைசேரியினால் 2026 வருடாந்த வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, இவ்வொதுக்கீடுகளும் மாகாண அபிவிருத்தி முதலீடுகளின் ஒரு பகுதியாக கருதப்பட வேண்டியுள்ளதால் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதியானது விவேகமான முறையில் பயன்படுத்துவதற்கு மற்றும் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி வினைத்திறன் மிக்கவாறு பயன்படுத்தும் நோக்கத்துடன் 2026 ஆம் ஆண்டிற்காக பராமரிப்பு செயல்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான வழிகாட்டல்கள் 2025 நவம்பர் 20 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது. அதற்கமைய , ஒதுக்கீடுகளில் 60% இற்கும் அதிகமான தொகையொன்று பொதுமக்களுக்கு நேரடியாக சேவை வழங்கும் சொத்துப் பராமரிப்பிற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என வழிகாட்டல்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.*

### *X. பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழிகாட்டல்களை வெளியிடல் - 2026*

*பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் – 2026 செயற்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு 33,500 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பாதீட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட நிதியினை வினைத்திறனாகவும் செயல்திறனாகவும் பயன்படுத்துவதற்கு க்மாகான சபைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வலிகாட்டல்களைத் தயாரித்து 2025 நவம்பர் 20 ஆந்திகதி மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டது. அதற்கமைய, சிறுவர்களின் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கான உணவு வேளையொன்றினை வழங்குவதற்காக இவ்வழிகாட்டல்களை உரியவாறு கருத்திற்கொண்டு இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்படும் நிதி மாகாண சபைகளினால்பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உணவு வேளைக்கு அதிக*

*மதிப்பினை சேர்ப்பதற்காக விவசாயம், கால்நடை, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் ஆகிய ஏனைய துறைகளுடன் ஒருங்கிணைந்து நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துமாறு மாகாணங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.*

### *XI.* விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பது தொடர்பாக வழிகாட்டல்களை வெளியிடல் – *2026*

*விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2026 ஆம் ஆண்டில் மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் (PSDG) கீழ் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி செயல்திறனான வகையில் பயன்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைவதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை நிதி ஆணைக்குழு 2025 நவம்பர் 20 ஆந்திகதி வெளியிட்டது. அதற்கமைய பயனாளிகளின் குடும்பங்களின் வருமான நிலைமையினை மேம்படுத்தும் தொழில் சந்தர்ப்பங்களை உருவாக்கும் முயற்சியாண்மை கருத்திட்டங்களுக்காக இவ்வொதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் கருத்திட்ட முன்மொழிவுகளை அடையாளம் காணுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.*

### *XII.* *2026* வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்வைப்பதற்கான கலந்துரையாடல்

*2026 வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து முன்வைப்பது தொடர்பாக மாகாண சபை அதிகாரிகளை விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடலொன்று கௌரவ மாகாண ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல் மற்றும் நிதி) ஆகிய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் 2025 நவம்பர் 06 ஆந்திகதி நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் நிதி ஆணைக்குழுவின் தலைவர் அவர்களின் தலைமையுடன் இடம்பெற்றதோடு அதில் ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட ஏனைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.*

*2026 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பது தொடர்பில் நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் நிதிப்பொறுப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண நிதி ஒழுங்குவிதிகளுக்கமைவாக கருத்திட்ட மதிப்பீட்டு நடைமுறைக்கு இசைவாக்கம் அடைவதன் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் இக்கூட்டத்தின் நோக்கமாகவிருந்தது. அதற்கமைய, வருடாந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கருத்திட்டங்களை உள்ளடக்க முன்னர் அவற்றை உரியவாறு மதிப்பிடுவதற்காக மாகாண திட்டமிடல் குழாம் மற்றும் அமைச்சு மட்டத்திலான திட்டமிடல் பிரிவு தீவிரமாக செயற்படுவதை உறுதி செய்யுமாறு மாகாண சபைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.*

### *XIII.* வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல் *2026*

*நிதி ஆணைக்குழுவினால் 2025 ஒக்டோபர் 7 ஆந்திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் (ADPs) ஒன்பது மாகாண சபைகளினாலும் நிதி ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.*

*அனைத்து திட்டங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்ததுடன், தேவையான இடங்களில் தெளிவுபடுத்தல்களையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்காக நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் விரிவான கலந்துரையாடல் தொடரொன்று நடத்தப்பட்டது (மேல் மாகாண சபையின் கலந்துரையாடல் அம்மாகாண சபையில் நடத்தப்பட்டது). நிதி ஆணைக்குழுவின் தலைவரது தலைமையுடன் ஆணைக்குழுவின் செயலாளர் , நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அங்கத்தவர்கள், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் , திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாணங்களின் கௌரவ*

*ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல் மற்றும் நிதி), திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண சபைகளின் ஏனைய உரிய சிரேஷ்ட அதிகாரிகள் இக்குழுவில் கலந்துகொண்டனர்.*

*இக்கலந்துரையாடலின் போது மாகாணங்களின் மக்களுக்கு உச்ச பயன்களை பெற்றுக் கொடுப்பதற்காக விவேகமான முறையில் மற்றும் வினைத்திறனான முறையில் நிதியினை பயன்படுத்தும் நோக்கத்துடன் திட்டங்கள் சிறப்பாக மீளாய்வு செய்து கண்காணிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டது. அதன்பின்னர், கலந்துரையாடல்களின் போது கலந்துரையாடப்பட்ட சிற்சில திருத்தங்களுக்குட்பட்டு அபிவிருத்தித் திட்டங்களில் பரந்த செயற்பாட்டு எல்லை வரையில் கொள்கை ரீதியிலாக முறையான ஒப்புதல் ஒன்பது மாகாணங்களுக்காகவும் 2025 டிசம்பர் 31 ஆந்திகதிக்கு முன்னர் மாகாண அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.*

*2025 டிசம்பர் 31 ஆந்திகதிக்கு முன்னர் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால் 2026 ஆம் ஆண்டிறுதியின் போது உயர் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தி அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகளை தாமதமின்றி 2026 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே செயற்படுத்த முடியும்.*

***அட்டவணை 04: 2026 ஆம் ஆண்டிற்கு வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒப்புதல் வழங்கப்பட்ட தினங்கள்***

| **மாகாணம்** | **வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கப்பெற்ற தினம்** | **மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட்ட தினம்** | **திட்டங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்ட தினம்** |
|---|---|---|---|
| மேல் | *2025.11.19* | *2025.12.10* | *2025.12.29* |
| மத்திய | *2025.11.17* | *2025.12.03* | *2025.12.29* |
| தென் | *2025.11.17* | *2025.12.02* | *2025.12.29* |
| வட | *2025.11.21* | *2025.12.15* | *2025.12.29* |
| வடமேல் | *2025.11.14* | *2025.12.05* | *2025.12.26* |
| வடமத்திய | *2025.11.24* | *2025.12.17* | *2025.12.29* |
| ஊவா | *2025.11.19* | *2025.12.13* | *2025.12.29* |
| சப்ரகமுவ | *2025.11.25* | *2025.12.19* | *2025.12.30* |
| கிழக்கு | *2025.11.14* | *2025.11.27* | *2025.12.26* |

## *XIV. 2025 ஆம் ஆண்டுக்கான மூலதன மானிய நிதி*

*2025 ஆம் ஆண்டிற்காக மாகாணங்களினால் கோரப்பட்ட மூலதன மானிய நிதித்தொகைகள், நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகள், 2025 ஆம் ஆண்டிற்காக பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகள் மற்றும் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட கட்டுநிதித் தொகையின் சாராம்சம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை 05: 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மூலதன மானிய நிதியினது சாராம்சம்*

| மாகாணம் | மாகாணங்களினால் கோரப்பட்ட தேவைப்பாடு (ரூ.மி) (a) | பரிந்துரைக்கப்பட்ட தொகை (ரூ.மி.) | | | பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி.) | | | விடுவிக்கப்பட்ட கட்டுநிதி (ரூ.மி.) | | | விடுவிக்கப்பட்ட கட்டு நிதி, பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் % ஆக e = (d/c*100) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாகாண ரீதியிலான குறித் தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி | பிரமாண அடிப்படையிலான மானிய நிதி | கூட்டுத் தொகை (b) | மாகாண ரீதியிலான குறித் தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி | பிரமாண அடிப்படையிலான மானிய நிதி | கூட்டுத் தொகை (c) | மாகாண ரீதியிலான குறித் தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி | பிரமாண அடிப்படையிலான மானிய நிதி | கூட்டுத் தொகை (d) | |
| **மேல்** | *16,429* | *13,538* | *1,658* | *15,196* | *5,894* | *585* | *6,479* | *5,800* | *585* | *6,385* | *99* |
| **மத்திய** | *9,754* | *16,905* | *2,070* | *18,975* | *7,360* | *730* | *8,090* | *6,010* | *725* | *6,735* | *83* |
| **தென்** | *15,675* | *16,023* | *1,962* | *17,985* | *6,976* | *692* | *7,668* | *5,769* | *692* | *6,461* | *84* |
| **வடக்கு** | *20,561* | *16,832* | *2,061* | *18,893* | *7,328* | *727* | *8,055* | *7,328* | *727* | *8,055* | *100* |
| **வடமேல்** | *19,905* | *15,700* | *1,922* | *17,622* | *6,835* | *678* | *7,513* | *6,493* | *678* | *7,171* | *95* |
| **வடமத்திய** | *7,843* | *16,111* | *1,973* | *18,084* | *7,014* | *696* | *7,710* | *5,007* | *679* | *5,685* | *74* |
| **ஊவா** | *11,117* | *17,655* | *2,162* | *19,817* | *7,688* | *763* | *8,451* | *5,382* | *534* | *5,916* | *70* |
| **சப்ரகமுவ** | *13,330* | *17,420* | *2,133* | *19,553* | *7,584* | *753* | *8,337* | *3,049* | *386* | *3,435* | *41* |
| **கிழக்கு** | *62,634* | *16,816* | *2,059* | *18,875* | *7,321* | *726* | *8,047* | *6,590* | *703* | *7,293* | *91* |
| **கூட்டுத் தொகை** | ***177,248*** | ***147,000*** | ***18,000*** | ***165,000*** | ***64,000*** | ***6,350*** | ***70,350*** | ***51,427*** | ***5,709*** | ***57,136*** | ***81*** |

### *2.1.2. மாகாண மீண்டெழும் பாதீட்டுடன் தொடர்புடைய விடயங்கள்*

#### *I. 2026 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்வது தொடர்பான வழிகாட்டல்களை வெளியிடல்*

*2026 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளுக்கான மதிப்பீடு குறித்த வழிகாட்டல்களை 2025 மார்ச் 07 ஆம் திகதியன்று மாகாண சபைகளுக்கு வெளியிட்டதன் மூலம் மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடும் செயற்பாடு தொடங்கியது. இவ்வழிகாட்டல்கள் முக்கியமாக ஆளுக்குரிய வரும்படிகள், ஏனைய மீண்டெழும் செலவினம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான மாற்றல்கள் மற்றும் மாகாண வருமான மதிப்பீடு போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டது. மீண்டெழும் வழிகாட்டல்களுடன் திரள் மானிய நிதிக்கான கோரிக்கைக்காக மாகாண சபைகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மாதிரிப்படிவங்களின் தொகுதியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.*

#### *II. 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடல்*

*மாகாண சபைகளினால் உரியவாறு பூர்த்தி செய்யப்பட தமது மீண்டெழும் தேவைப்பாடுகள் உள்ளடங்கிய மாதிரிப்படிவங்கள், வழிகாட்டலுடன் இணைக்கப்பட்டுள்ள நாட்காட்டிக்கமைய நிதி ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டது. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைப்பாடுகள் தொடர்பில் மாகாண அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு மதிப்பிடப்பட்டது. இதற்காக மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட பணிப்பாளர்கள் உள்ளிட்ட ஏனைய தொடர்புபட்ட மாகாண அதிகாரிகளுடன் கூட்டங்கள் சில இடம்பெற்றதுடன், வரவு செலவுத்திட்டத் திணைக்களம், முகாமைத்துவ*

*சேவைகள் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் இக்கூட்டங்களில் பங்கேற்றனர்*

*மீண்டெழும் தேவைப்பாடுகளின் மதிப்பீடு குறித்த வருடாந்த வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்ற தினங்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.*

***அட்டவணை 06: வருடாந்த வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட கால அட்டவணை***

| ***மாகாணம்*** | ***கலந்துரையாடல் மேற்கொண்ட தினங்கள்*** |
|---|---|
| மேல் | *2025.07.16* |
| மத்திய | *2025.07.02* |
| தென் | *2025.07.09* |
| வட | *2025.07.07* |
| வடமேல் | *2025.07.18* |
| வட மத்திய | *2025.07.22* |
| ஊவா | *2025.07.14* |
| சப்ரகமுவ | *2025.07.11* |
| கிழக்கு | *2025.06.30* |

### *III.* மாகாணங்களின் மீண்டெழும் தேவைகள் மீதான பரிந்துரைகளை பொது திறைசேரிக்குத் தெரியப்படுத்தல்

*மாகாண அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர், மாகாண மீண்டெழும் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமானங்கள் 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்வதற்காக பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதற்கமைய, மாகாண சபைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட திரள் மானிய நிதி 692,416 மில்லியன் ரூபாயாக 2025.08.14 ஆம் தினத்தன்று பொது திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டது. (உள்ளூராட்சி மன்றங்களுக்கான வருமான மாற்றல்கள், எதிர்பாரா செலவு நிதியம் மற்றும் முற்பண "பி" கணக்கிற்கான ஒதுக்கம் ஆகியன உள்ளடங்கலாக)*

### *IV.* 2026 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளைத் தெரிவித்தல்.

*2026 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவின் மூலம் மாகாண சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும் வரவு செலவுத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டுப் பெறுமதி 2025.11.14 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டிற்காக தேசிய பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட மொத்த மீண்டெழும் ஒதுக்கீடு 586,974.50 மில்லியன் ரூபாயாகும். (மாகாண வருமானங்களையும் சீராக்கிய பின்னர்)*

### *V.* 2025 ஆம் ஆண்டுக்கான மேலதிக ஒதுக்கீட்டினை பரிந்துரை செய்தல்

*முக்கியமாக 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் சம்பளத் திருத்தங்களை மேற்கொள்ளல், வரவு செலவுத்திட்டத்தினால் ஒதுக்கீடு மேற்கொண்ட பின்னர் நிரல் அமைச்சுக்களால் நியமிக்கப்பட்ட ஆளணி இணைப்புக்கள், புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை செலவினத்தின் அதிகரிப்பு காரணமாகவே மாகாண சபைகளினால் மேலதிக ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டில், பரிந்துரைக்கப்பட்ட மேலதிக ஒதுக்கீட்டுத் தொகைகள் பின்வருமாறு.*

*அட்டவணை 07: பரிந்துரைக்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடு – 2025*

| திகதி | மேலதிக ஒதுக்கீட்டுக்கான மொத்த பரிந்துரை (ரூ.மி) |
|---|---|
| *2025.09.16* | *30,632.82* |
| *2025.10.22* | *1,397.00* |
| *2025.10.27* | *7,488.07* |
| *2025.12.08* | *446.99* |

## *VI. 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண வருமான மதிப்பீடு*

*2025 மார்ச் 07 ஆந்தினத்தன்று, நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட மீண்டெழும் வரவு செலவுத்திட்ட தேவை மதிப்பீட்டிற்குரிய வழிகாட்டலின்படி, மாகாண சபைகளினால் தங்களது மதிப்பிடப்பட்ட வருமான இலக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன. உரிய மாகாண அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களின் போது (அட்டவணை இலக்கம் 06) முன்வைக்கப்பட்ட மாகாண வருமான இலக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு மாகாண வருமானத்திற்கு தாக்கம் செலுத்தும் காரணிகளின் தற்போதைய போக்கினை கருத்திற்கொண்டு 2026 ஆம் ஆண்டிற்கான மாகாண வருமான இலக்குகள் மதிப்பிடப்பட்டன. இறுதியாக நிதி ஆணைக்குழுவினால் ஒப்புக்கொள்ளப்பட்ட வருமான இலக்குகள் மற்றும் அரசாங்க நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் மாகாணங்களுக்கு மாற்றப்பட்ட வருமானப் பகுதியினை கவனத்திற் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண வருமானங்கள் மதிப்பிடப்பட்டது.*

## *VII. மாகாண சபைகளுக்கான மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைப்பாடுகளுக்கான கட்டுநிதி விடுவிப்பினைப் பரிந்துரைத்தல்.*

*2023.12.29 திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 05/2023 இன் பிரகாரம் மாகாண சபைகள் தனிச் செலவின அலகுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதம செயலாளர்கள் பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்புக் கூறல் வேண்டும். திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் TO/BE4/01/07/06 இலக்க 2024.03.06 ஆம் திகதியுடைய கடிதத்திற்கமைய, 2025 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளுக்குத் தேவையான மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளுக்காக கட்டுநிதிக் கோரிக்கைகள் நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.*

*2025 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான நிதி ஆணைக்குழுவினாலான நிதிப் பரிந்துரைகள், தேசிய பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள், கட்டுநிதி விடுவிப்புக்கள், மாகாண வருமான மற்றும் மாகாண மீண்டெழும் செலவினங்கள் உள்ளடங்கிய சாராம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை 08 : மீண்டெழும் பாதீட்டுக்கான மாகாண நிதி முன்னேற்றம் -2025*

*(ரூ.மில்லியன்)*

| மாகாணம் | நிதி ஆணைக்குழுவின் பரிந்துரை | திரள் மானிய நிதிக்கான ஒதுக்கீடு (மேலதிக ஒதுக்கீடு உள்ளடங்கலாக) | திரள் மானிய நிதிக்கான கட்டுநிதி விடுவிப்பு | மாகாண பன்முகப் படுத்தப்பட்ட வருமான சேகரிப்பு (முத்திரைக் கட்டணம் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக) | அரச வருமான மாற்றல்கள் | மொத்த கிடைப்பனவு | உண்மையான மீண்டெழும் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7)= (4+5+6) | (8) |
| மேல் | 101,431 | 76,734 | 75,082 | 13,837 | 11,999 | 100,918 | 93,562 |
| மத்திய | 77,612 | 60,997 | 59,750 | 3,128 | 2,249 | 65,127 | 62,727 |
| தென் | 68,868 | 61,517 | 61,257 | 4,223 | 2,320 | 67,799 | 63,902 |
| வட | 51,126 | 43,565 | 43,354 | 1,518 | 1,233 | 46,105 | 44,622 |
| வடமேல் | 68,667 | 58,283 | 57,690 | 6,096 | 2,296 | 66,083 | 61,682 |
| வடமத்திய | 43,158 | 36,489 | 35,201 | 2,531 | 1,275 | 39,008 | 37,284 |
| ஊவா | 48,081 | 42,142 | 41,688 | 1,842 | 1,215 | 44,746 | 42,779 |
| சப்ரகமுவ | 59,340 | 50,607 | 46,995 | 2,712 | 1,321 | 51,028 | 50,415 |
| கிழக்கு | 59,801 | 51,303 | 49,490 | 1,529 | 1,261 | 52,280 | 50,988 |
| மொத்தம் | **578,084** | **481,637** | **470,507** | **37,417** | **25,169** | **533,094** | **507,961** |

### 2.1.3 மாகாண அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கைகள் தொடர்பில் இடம்பெற்ற விசேட கூட்டங்கள்

**I. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்வு செய்வதற்காக சப்ரகமுவ மாகாணத்தினால் பயன்படுத்தப்படும் பொறிமுறையினை மீளாய்வு செய்தல்**

*மாகாண அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அக்கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக சப்ரகமுவ மாகாணத்தினால் பின்பற்றப்படும் வழிமுறையினை கலந்துரையாடல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான கூட்டமொன்று சப்ரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் தலைமையுடன், நிதி ஆணைக்குழுவின் செயலாளர், சப்ரகமுவ மாகாணத்தின் பிரதம செயலாளர் மற்றும் மாகாணத்தின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றலுடன் 2025 யூன் 25 ஆந்திகதி சப்ரகமுவ மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்றது. அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அச்சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய தீர்வுகளை அடையாளம் காண்பது கூட்டத்தின் நோக்கமாகவிருந்தது.*

**II. மேல் மாகாணத்தின் "புலத்சிங்ஹல பிரதேசத்தினை சுற்றுலாத்தளமாக மேம்படுத்தல்" எனும் விசேட அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான முன்மொழிவினை மீளாய்வு செய்தல்**

*மேல் மாகாண சபையினால் விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் "உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் புலத்சிங்ஹல பிரதேசத்தினை சுற்றுலாத் தளமாக*

*மேம்படுத்துதல்" என்ற தலைப்பின் கீழ் முன்வைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு தொடர்பாக 2025 யூலை 23ஆந்திகதி நிதி ஆணைக்குழுவில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மேல் மாகாண பிரதம செயலாளர் இக்கூட்டத்தின் சம தலைமைத்துவம் வகித்ததோடு மேல் மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்), பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), புலத்சிங்ஹல பிரதேச செயலாளர் மற்றும்மேல் மாகாண சபையினதும் நிதி ஆணைக்குழுவினதும் ஏனைய தொடர்புபட்ட அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக இச்செயற்பாடுகளின் சாத்தியக்கூறு, வினைத்திறன் மற்றும் பங்களிப்பு தொடர்பாக இக்கூட்டத்தின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. பின்னர், 2025 ஆகஸ்ட் 10 ஆந்திகதி, மாகாண அதிகாரிகள், புலத்சிங்ஹல பிரதேச சபையின் அதிகாரிகள், புலத்சிங்ஹல பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் கருத்திட்ட முன்மொழிவுகளை ஆராய்வதற்கு களச்சுற்றுலா ஒன்று மேற்கொள்ளப்பட்டது.*

### *III. 2025* ஆம் ஆண்டுக்கான மாகாண சபை வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

*2025 ஆம் ஆண்டிற்காக அனைத்து மாகாண சபைகளினதும் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கான கூட்டமொன்று 2025 ஆகஸ்ட் 12 ஆந்திகதி நிதி ஆணைக்குழுவில் இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவர், திறைசேரியின் செயலாளர், நிதி ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள், நிதி ஆணைக்குழுவின் செயலாளர், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திட்டமிடல் மற்றும் நிதி தொடர்பான பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின், முக்கமைத்துவ சேவைகள் திணைக்களத்தின், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிநிதிகள் மற்றும் நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.*

*2025 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு மாகாணத்தினதும் உரிய வருடாந்த அபிவிருத்தி திட்டங்களுக்கமைய மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வது இக்கூட்டத்தின் நோக்கமாக அமைந்தது. வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகையில் மாகாண சபைகள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் மற்றும் அச்சிக்கல்களை தீர்த்து மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது.*

### *IV.* கௌரவ ஆளுநர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களுடன் முன்னேற்ற மீளாய்வு

*கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2025 செப்டெம்பர் 11 ஆந்திகதி நடாத்த உத்தேசிக்கப்பட்டிருந்த மாகாண முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்கு முன்னராக 2025 மாகாண அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்கு இடையூறாக உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்காக மாகாண அதிகாரிகளுடனான கூட்டமொன்று 2025 செப்டெம்பர் மாதம் 09 ஆந்திகதி நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் நடாத்தப்பட்டது. அக்கூட்டம் நிதி ஆணைக்குழுத் தலைவரின் தலைமையுடன் கௌரவ மாகாண ஆளுநர்கள், நிதி ஆணைக்குழுவின் செயலாளர், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல் மற்றும் நிதி) மற்றும் நிதி ஆணைக்குழுவின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.*

### *2.1.4* நிதி ஆணைக்குழுவினைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிதி ஆணைக்குழுவினது செயலாளர் அவர்கள் இணைத்தலைமை/ அங்கத்துவம் வகித்த விசேட குழுக்கள் மற்றும் கூட்டங்கள்

*(i) உள்ளூராட்சி மன்றங்களின் வருமானமீட்டும் கருத்திட்டங்களுக்கான செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட மூலதன மானிய நிதியினை வழங்குவதற்கான குழு – இணைத்தலைமை*

*(ii)* நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் காணி உரிமை மாற்றத்தின் மீதான முத்திரைக் கட்டணம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெறப்படுவதை முறைமையாக்குதல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழு – அங்கத்தவர்

*(iii)* அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைக்கான குழு – அங்கத்தவர்

*(iv)* பாடசாலை சிறுவர்களுக்காக போசாக்கான உணவு வேளையொன்றினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தேசிய குழு – இணைத்தலைமை

*(v)* உள்ளூராட்சி மன்றங்களின் சம்பள மீளளிப்பிற்கான மானிய நிதியினை குறைப்பதற்குப் பொருத்தமான வழிமுறையினை முன்மொழிவதற்கான குழு – இணைத்தலைமை

*(vi)* ஆசிய அபிவிருத்தி வங்கியினது நிதியுதவியின் கீழ் செயற்படும் ஒருங்கிணைந்த சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான உலகளாவிய சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தினது செயற்பாட்டுக் குழு – இணைத்தலைமை

*(vii)* உலக வங்கியின் நிதியுதவின் கீழ் செயற்படும் ஆரம்பநிலை சுகாதார சேவை அமைப்புக்களை மேம்படுத்தும் கருத்திட்டத்தினது செயற்பாட்டுக் குழு – அங்கத்தவர்

*(viii)* தேசிய மதிப்பீட்டு மற்றும் செயற்பாட்டுக் குழுவின் நிரந்தர உறுப்பினர்

*(ix)* வெளிநாட்டு தூதுவக் குழுக்களுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளுக்காக நிதி ஆணைக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ளல்

### *2.1.5 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்*

*2020.08.28 ஆந்திகதியுடைய இலக்கம் 02/2020 மற்றும் 2025.05.30 திகதியுடைய இலக்கம் 02/2025 அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதமர் அவர்களின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்காக முன்வைப்பதற்கு 2025 யூன் 19 ஆந்திகதி சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, கௌரவ பிரதமர் அவர்களின் ஒப்புதலுடன், அவ்வறிக்கையானது 2025 யூன் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இவ்வறிக்கையில் முக்கியமாக நிதி ஆணைக்குழு தொடர்பிலான கண்ணோட்டம், 2024 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஆணைக்குழுவின் முக்கிய செயற்பாடுகளின் செயல்திறன், நிதி முன்னேற்றம் மற்றும் இணக்க அறிக்கை ஆகியவை உள்ளடங்கும். இவ்வறிக்கை அரச நிதித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.*

### *2.1.6* கௌரவ ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான விடயங்கள்

***I. 2026* ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த பரிந்துரைகளைத் தயாரித்து கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல்.**

*நிதி ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 154ண உறுப்புரையின் (4) (அ) பந்திக்கமைவாக, 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு 2025 ஒக்டோபர் 31 ஆந்திகதி கௌரவ ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டது. மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட இம்முழுமையான அறிக்கையானது நிதி ஆணைக்குழுவினது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன், 2026 ஆம் ஆண்டிற்கான மாகாணங்களுக்கு மதிப்பிட்டப்பட்ட நிதித் தேவைகளுக்கான பரிந்துரைகள் மற்றும் வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கப்படும் நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய கொள்கைகள் தொடர்பாக இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

*அரசியலமைப்பின் 154ண உறுப்புரையின் (3) பந்திக்கமைவாக, 2026 ஆம் ஆண்டுக்காக தேசிய பாதீட்டினால் மாகாண சபைகளினது மூலதன மற்றும் மீண்டெழும் தேவைப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய நிதி தொடர்பாக நிதி ஆணைக்குழுவினால் தமது பரிந்துரைகள் அரசிற்கு முன்வைக்கப்பட்டது. எதிர்வுகூறப்பட்ட வருமானத்தினை சீராக்கிய பின்னர், 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியாக 114,647 மில்லியன் ரூபாய் மற்றும் பிரமாண அடிப்படையிலான மானிய நிதியாக 15,000 மில்லியன் ரூபாயும் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கமைய, எதிர்வுகூறப்பட்ட வருமான இலக்குகளை சீராக்கிய பின்னர், 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மொத்த மூலதன மானிய நிதித்தொகை 129,647 மில்லியன் ரூபாயாகும்.*

*அரசியலமைப்பின் 154ண உறுப்புரையின் (5) ஆம் பந்திக்கமைவாக, சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்துகொள்வதற்காக கவனத்திற் கொள்ள வேண்டிய அளவுகோல்கள் மற்றும் சிறுவர் மந்தபோசனை தொடர்பான அளவுகோளொன்றையும் உள்ளடக்கி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் உதவியுடன் பல்மாறி எண்கணித முறைமையொன்றினைப் பயன்படுத்தி மேலே குறிப்பிட்ட மொத்த மூலதன மானிய நிதித் தொகையானது ஒன்பது மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்குகின்றது.*

*எதிர்வுகூறப்பட்ட மாகாண வருமானத்தினை சீராக்கிய பின்னர் 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளினது மீண்டெழும் செலவினமாக 692,416 மில்லியன் ரூபாய் நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்டதாக பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டது.எவ்வாறாயினும், 2026-2030 நடுத்தர கால அரச நிதிச் சட்டகத்தினுள் 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் நியமங்களுக்கேற்ப பொது திறைசேரியினால் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள செலவின எல்லைகளுக்கேற்ப, 2026 ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான திரள் மானிய நிதியாக 533,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என ஒதுக்கீட்டு சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. நிதி ஆணைக்குழுவினால் ஆழ்ந்த ஆராய்வின் பின்னரான மதிப்பிடப்பட்ட மீண்டெழும் தேவைப்பாடுகளின் அளவு மற்றும் ஒதுக்கீட்டு சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டிருந்த திரள் மானிய நிதி ஆகியவற்றுக்கிடையிலான கண்காணிப்பின் பின்னரான இடைவெளி காரணமாக 2026 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளினது மீண்டெழும் தேவைகளை பூர்த்தி செய்யும்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் பரிந்துரை அறிக்கையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.*

*இதுதவிர, அரசின் மொத்த அபிவிருத்தி உபாய மார்க்கத்திற்கு துணைபுரியும் மாகாண சபைகளினது வினைத்திறன்மிக்க செயலாற்றுகைக்காக வசதி வாய்ப்பளிக்கும் சில கொள்கை ரீதியிலான பரிந்துரைகளும் கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் முனவைக்கப்பட்ட இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டதோடு, அவை சுருக்கமாக கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.*

***(1) முன்கூட்டிய திட்டமிடலின் மூலம் 2026 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை காலதாமதமின்றி செயற்படுத்துதல்.***

*மாகாண சபைகளைப் போலவே நிரல் அமைச்சுக்களுக்கும் 2025 ஆம் ஆண்டுக்கான அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளில் செலவு செய்யப்பட்ட தொகை ஒப்பீட்டளவில் குறைந்த சதவீதமாகும். 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவு 2025.03.21 ஆம் தினத்தன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், கருத்திட்டங்களை திட்டமிடுவது அதற்கு முக்கியமான காரணமாக அமைந்தது.*

*எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 15 ஆவது உறுப்புரைக்கமைய 2026 ஆம் ஆண்டுக்காக பொது திறைசேரியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உச்ச எல்லை வரையறைக்கமைய (Binding Ceilings), ஒதுக்கீட்டு சட்ட வரைவில் மாகாண சபைகளுக்காக உச்ச எல்லை ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஒதுக்கீடானது ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் 2025.10.07 திகதியிட்டு மாகாண பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டதுடன், வருடாந்த அபிவிருத்து திட்டங்கள் 2025.11.15 ஆந்திகதிக்கு முன்னர் முன்வைப்பதற்கும், உரிய திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு 2025.12.31 திகதியாகும் போது நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.*

*நிரல் அமைச்சுக்களுக்கும் மேற்குறிப்பிட்டவாறு 2026 ஒதுக்கீட்டு சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுத் தொகைகளை கருத்திற்கொண்டு முன்கூட்டியே திட்டமிடல் நடைமுறை முன்னெடுக்கப்படுமாயின் , உரிய அமைச்சுக்களின் கருத்திட்டங்களையும் மாகாண சபை அபிவிருத்தித் திட்டங்களுடன் செவ்வனே ஒருங்கிணைத்து இரட்டிப்பினைத் தவிர்த்து வினைத்திறனானவாறு ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படுமென ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.*

***(2) நுண் மற்றும் சிறு பரிமாண முயற்சியாண்மை அபிவிருத்தியின் போது தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை உடனிகழ் முறையில் செயற்படுத்துவதற்கான தேவைப்பாடு***

*வாழ்வாதார அபிவிருத்தி, புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதன் முகமாக விவசாயம், கால்நடை, கடற்றொழில், சிறு கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு ஆகிய விடயங்களுக்காக மாகாண சபைகள் மூலம் நுண் மற்றும் சிறு பரிமாண கருத்திட்டங்களில் பெருமளவானவை அந்நடவடிக்கையின் கிரயத்தின் 50% (மீண்டும் அறவிடப்படாத) நன்கொடையாக மாகாண சபைகளினால் வழங்கப்படும் மிகுதி 50% பயனாளியினால் பொறுப்பேற்கப்படும் அடிப்படையிலும் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

*இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் வழமை போன்று ஒவ்வொரு வருடமும் செயற்படுத்தப்படுவது எந்த அளவிற்கு பயனுள்ளதாகும் என்பது பற்றி மாகாண சபைகளில் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களில் சிக்கல்கள் பல அடையாளம் காணப்பட்டன. அதன்போது, நன்கொடையினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் மாத்திரம் இதில் இணைந்து கொண்டாலும் அதிகளவானோருக்கு உண்மையான தேவைப்பாடோ அல்லது முயற்சியோ இல்லாது காணப்பட்ட அதேவேளை வியாபாரத் திட்டம் மற்றும் திறமைகள் இல்லாதிருத்தல், கருத்திட்டங்கள்/ செயற்பாடுகள் வெற்றியடையா சந்தர்ப்பங்களில் அதற்கு முதலீடாகப் பயன்படுத்தியிருந்த தனிநபர் நிதியும் வீணடிக்கப்படல், அரசின் நன்கொடையினை செலவாக கருதாமையினால் நட்டமேற்படும் கருத்திட்டங்களையையும் இலாபமீட்டுபவையாக பிழையாக அடையாளம் கண்டிருத்தல், முயற்சியாளராக திறமையிருந்தும் தனியாளாக வழங்க வேண்டிய முதலீட்டினை ஈட்டிக்கொள்ள சிரமமான சந்தர்ப்பங்களில் தமது நடவடிக்கைகளை இலாபமற்ற*

*பரிமாணத்துக்குள் வரையறுக்கப்பட வேண்டி ஏற்படல் பொந்திர சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*ஆகையால், நலப்பயன் பங்களிப்பு திட்டத்திற்குப் பதிலாக அரசின் நன்கொடை வட்டியற்ற/ எளிய வட்டி மீதான கடனொன்றாக பயனாளிகளுக்கு வழங்கப்படுவதன் பொருத்தப்பாட்டினைப் பற்றி நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கமைய, கிட்டத்தட்ட அனைத்து மாகாண சபைகளினாலும் 2025 ஆம் ஆண்டில் நேரடி மானிய நிதிக்குப் பதிலாக வட்டியற்ற/ சலுகைக் கடன் முறைகளை செயற்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், நிரல் அமைச்சுக்கள் மற்றும் குறித்த விடயங்களுக்கேயான மீளறவிடப்படா அடிப்படையில் 50% நிதியுதவியினை வழங்குவதன் மூலம் மாகாண சபைகளினால் இச்செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.*

*ஆகையால், வாழ்வாதார அபிவிருத்திக்காக நுண் மற்றும் சிறு அளவிலான பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் முதலீடுகள் மூலம் உச்சமட்ட பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிலையான அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்காக மீளறவிடப்படாத நன்கொடை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு மாத்திரம் செயற்படுத்துவதற்கும், அவ்வாறான செயற்பாடுகளுக்காக ஏனைய அனைத்து பயனாளிகளுக்கு வட்டியற்ற / சலுகைக் கடன் முறையொன்றின் கீழ் நிதி வசதி வழங்குவது உசிதமானதெனவும் நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டது.*

*(i)* *விசேட தேவையுள்ள நபர்கள்*

*(ii)* *நன்னடத்தை காலம் முடிவுற்று சமூகத்தில் இணையும் நபர்கள்*

*(iii)* *நீண்டகால நோய் நொடி காரணமாக போட்டித்தன்மையுடன் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நபர்கள்*

*(iv)* *தனிநபராக பிள்ளைகளை வளர்க்கும் தாய்மார் (Single Mothers)*

*(v)* *பல்வேறு துறைகளின் கீழ் தொழில்சார் பயிற்சியினைப் பெற்று அத்தொழிலினூடு முதல்முறையாக சுயதொழில்களில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள் (ஆரம்ப மூலதனத்திற்காக)*

*அதற்கமைய,இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களுக்கு நன்கொடை வழங்கியில் தேசிய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்திலான நிறுவனங்களினால் வழமைபோன்ற முறைமையொன்றினை செயற்படுத்துவது உசிதமாகுமென பரிந்துரைக்கப்பட்டது.*

***(3) வெளிநாட்டு நிதியுதவி மூலம் செயற்படுத்தப்படும் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்குரிய கருத்திட்டங்களை மிகவும் பொருத்தமான வகையில் திட்டமிடல்***

*மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குரிய வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்கள் / கருத்திட்ட கூறுகள் பெரும்பாலாக நடுநிலையாக திட்டமிடப்பட்டு நிரல் அமைச்சுக்களினாலேயே செயற்படுத்தப்படுவதாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதோடு, அவ்வாறான கருத்திட்டங்கள் மாகாண சபைகளினால் அடையாளம் காணப்பட்ட முதன்மையானவையாக இல்லாதிருப்பதும் மாகாண சபைகளின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்காமையும் பெரும்பாலாக காணக்கூடியதாக உள்ளது.*

*அவ்வாறான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆற்றல் மாகாண சபைகளிடம் காணப்படினும், நிரல் அமைச்சுக்களினால் அமைக்கப்பட்ட கருத்திட்ட அலுவலகங்களினால் மாகாண சபை அதிகாரிகளுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்கி அதிக நிர்வாகச் செலவினை ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றன. அக்கருத்திட்டங்கள் நிறைவடைந்த பின்னர் அதன்மூலம் உருவாகிய சொத்துக்களின் பொறுப்போ அல்லது அக்கருத்திட்டங்களுக்குரிய சேவை வழங்கும் பொறுப்பினை முறையாக ஏற்றுக்கொள்வதற்கு*

*எவரும் காணப்படவில்லை. உள்நாட்டு நன்கொடைகளைப் பயன்படுத்தி குறைந்த செலவின் கீழ் நிர்மாணிக்கக்கூடியதாக இருப்பினும், சில வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் கூடிய கிரயத்துடன் மேற்கொண்ட கட்டுமானகள் பல பயன்படுத்தப்பட முடியாத அல்லது குறை பயன்பாட்டுடைய நிலைமைக்குள்ளாகியுள்ளது.*

*ஆகையால், மாகாண சபை விடயங்களுக்குரிய வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களை திட்டமிடுவது தொடர்பில் கீழ்வரும் பரிந்துரைகள் நிதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.*

- *(i)* *மாகாண சபைகளின் முழுப் பங்கேற்பினையும் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சிக்கல்கள் குறைந்த நிதியோட்ட முறையொன்றினைப் பயன்படுத்துதல்,*

- *(ii)* *உள்நாட்டு நன்கொடைகளைப் பயன்படுத்தி குறைந்த செலவின் கீழ் நிர்மாணிக்கக்கூடிய சிறு அளவிலான கருத்திட்டங்கள் / செயற்பாடுகளை வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுள் உள்ளடக்காமை.*

- *(iii)* *முடிந்தவரையில் திட்டமிட்ட செயற்பாடுகளுக்காக கருத்திட்ட ஆதரவு முறைக்குப் பதிலாக (Project Support mode) வெளிநாட்டு நிதியுதவியினை ஈடு செய்யும் முறையாக (Budget support mode) செயற்படுத்துவதற்கு திட்டமிடல்.*

- *(iv)* *மாகாண கூறிற்குரிய கட்டுமானப்பணிகள் மற்றும் கொள்வனவுகளுக்காக (அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கையின் கீழ் முன்னெடுப்பதற்கு) மாகாண சபைகளுக்கு இடமளித்தல்.*

### *(4) கிராமிய பிரதேசங்களில் மற்றும் பெருந்தோட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை மறுசீரமைப்பதனை ஒரு முன்னோடித் திட்டமாக செயற்படுத்தல்*

*கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள குறைந்த மாணவர் எண்ணிக்கையினைக் கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு தரமான கல்வி கிடைக்கப் பெறாமையினால், முழுமையான ஆய்விற்குப் பின்னர், குறித்த பாடசாலைகளை அவற்றிற்கு அருகாமையில் அமைந்துள்ள ஒப்பீட்டளவில் அதிக வசதிகளுடன் கூடிய பாடசாலைகளுடன் ஒருங்கிணைப்பதன் பொருத்தப்பாட்டினைப் பற்றி இவ்வாணைக்குழுவினால் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்காக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*மாகாண சபைகளினால் பெற்றுக்கொண்ட தகவல்களின்படி இலங்கை முழுவதும் 50 மாணவர்களிலும் குறைந்த மாணவர் எண்ணிக்கையினைக் கொண்ட 1,541 பாடசாலைகள் உள்ளதோடு அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை 45,659 ஆகவும் அவற்றில் சேவை புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 8,712 ஆகவும் உள்ளது. அவற்றில் சில பாடசாலைகளின் அமைவிடத்திற்கேற்ப போக்குவரத்து சிரமங்களற்ற, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் இல்லாத, பாலங்களற்ற ஆறுகள் அல்லது பயணிக்கக் கடினமான நிலப்பிரதேசங்கள் இல்லாத பிரதேசங்களில் மேலும் இப்பாடசாலைகள் இயங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.*

*தகவல்களின்படி, 24 பாடசாலைகள் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதோடு, அப்பாடசாலைகளில் 718 மாணவர்களும் 147 ஆசிரியர்களும் உள்ளனர். அப்பாடசாலைகளிலும் கொழும்பு வலயத்தின் 50 மாணவர்களிலும் குறைவான பாடசாலையிலிருந்து வசதிகள் கொண்ட பாடசாலைக்கான தூரம் 1 கிலோமீட்டரிலும் குறைவாகும்.அதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் பாடசாலைகள் பெரும்பாலானவற்றை மாணவர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் அருகிலுள்ள பாடசாலையுடன் ஒருங்கிணைக்க முடியும் என்பதோடு அவர்கள் இணைக்கப்படும் பாடசாலை வரையிலான தூரத்திற்கேற்ப அம்மாணவர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு ஒன்றினை வழங்குவது உசிதமாகும்.*

*மேற்குறிப்பிட்டவாறான ஊக்கக் கொடுப்பனவுகளை வழங்கி இக்கருத்திட்டத்தினை முன்னோடி கருத்திட்டமாக கொழும்பு மாவட்டத்தினுள் செயற்படுத்துவது உசிதமானதாகவும்,*

*அதன்போது அடையாளங்காணக்கூடிய நடைமுறை அனுபவங்களையும் அடிப்படையாக் கொண்டு இவ்வேலைத்திட்டத்தினை ஏனைய மாகாணங்களிலும் வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் எனவும் நிதி ஆணைக்குழுவினால் முன்மொளியப்படுகின்றது.*

***(5) கருத்திட்டங்களை செயற்படுத்துவதனை மதிப்பாய்வு செய்கையில் பொதுமக்களின் பங்குபற்றலைப் பெற்றுக் கொள்ளுதல்.***

*அரசின் நன்கொடைகளைப் பயன்படுத்தி அரச நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை எதிர்பார்த்த தரத்துடன் நிறைவு செய்வதற்காக அக்கருத்திட்டங்கள் தொடர் மதிப்பாய்வொன்று மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்பட வேண்டும். எவ்வாறாயினும், நடைமுறையிலுள்ள அதிகாரிகளின் பற்றாக்குறை மற்றும் வசதிகள் பற்றாக்குறை அதேபோல், கருத்திட்டங்களின் எண்ணிக்கை பெருமளவில் காணப்படல் ஆகிய காரணங்களினால் அவ்வதிகாரிகளுக்கு அனைத்து கருத்திட்டங்களையும் அவ்வாறு சமீபமாகக் கண்காணிப்பது நடைமுறையில் சிரமமாகியுள்ளது.*

*இதற்குப் பதிலாக, உரிய அதிகாரிகளினால் குறித்த கருத்திட்டங்களை கண்காணிப்பதற்கு மேலதிகமாக ஒவ்வொரு கருத்திட்டமும் செயற்படுத்தப்படும் பிரதேசத்தின் பொதுமக்களுக்கும் அதேபோல் மக்கள் பிரதிநிதிகளுக்கும் குறித்த கட்டுமானப் பணிகள் தொடர்பில் விழிப்புடன் இருப்பதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுப்பதாகும் எனத் தென்பட்டது. அதற்கமைய, மாகாண சபைகளினால் நடைமுறைப்படுத்தப்படும் கட்டுமான கருத்திட்டங்களின் கணிய அளவுச் சிட்டையை (BOQs) பொதுமக்களுக்கு இலகுவாக வாசித்து புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கருத்திட்டங்களை செயற்படுத்தும் பிரதேசங்களுக்கு அருகாமையில் காட்சிப்படுத்துமாறும், ஏதேனும் தகவல் ஒன்றினை வேண்டி நிற்கும் சந்தர்ப்பமொன்றில் அத்தகவல்களை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வழங்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு நிதி ஆணைக்குழுவினால் மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவித்து அனுப்பப்பட்டது.*

*i. தேவையான நபரொருவருக்கு வேலைத்தளத்தினுள் குறித்த கணிய அளவுச் சிட்டையினை பரீட்சிக்க இடமளித்தல்.*

*ii. தேவையான நபரொருவருக்கு அக்கணிய அளவுச் சிட்டைகளின் புகைப்படங்களை பெற இடமளித்தல்.*

*iii. மாகாண சபையின் குறிப்பிட்ட இணையத்தளத்தில் அக்கணிய அளவுச் சிட்டைகளை காட்சிப்படுத்தல் மற்றும் கனிய அளவுச் சிட்டைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய இணையத்தளத்தினை அணுகும் முறையினை லெமினேட் செய்யப்பட்ட பிரசுரமொன்றினால் வேலைத்தளத்திற்கு உள்நுழையும் இடத்தில் காட்சிப்படுத்தல் மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் கணிய அளவுச் சிட்டையினை வழங்குவதற்கான திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.*

*இவ்வறிவுறுத்தல்கள் அனைத்து மாகாணங்களிலும் செயற்படுத்தப்படுவதோடு, ஊடகங்களினூடான கருத்துக்களின்படி இவ்வேலைத்திட்டம் பொதுமக்களின் பாராட்டுக்குரியதாக உள்ளது என்பது தெரிய வந்துள்ளது. ஆகையால், அரச நன்கொடை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளை தொடர் கண்காணிப்பு செய்யும் போது மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படும் மேற்குறிப்பிட்ட வழிமுறையினை கவனத்திற் கொண்டு, கணிய அளவுச் சிட்டைகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்குரிய அடிப்படைத் தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென, அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்துவது உசிதமாகும் என நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்படுகின்றது.*

*(6)* **நன்னடத்தையிலுள்ள சிறுவர்களை பராமரிக்கும் ஆளணியினரின் தேவைப்பாடு**

*பல்வேறு காரணங்களினால் பெற்றோரின் அரவணைப்பு கிடைக்கப்பெறாத அனாதை சிறுவர்கள் போலவே இளம் குற்றவாளிகளையும் பாராமரிப்பது மாகாண சபைகளின் கீழுள்ள நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பல்வேறு பராமரிப்பு நிலையங்களினால் பூர்த்திசெய்யப்படுகின்றது. இவ்வாணைக்குழுவினால் கடந்த வருடத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அறிக்கையில் விரிவாக முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு குறித்த நிறுவனங்களுக்கு பௌதீக வசதிகளை வழங்குவது தொடர்பாகவும், போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பாகவும், குறித்த சிறுவர்களின் வயது பூர்த்தியடைவதோடு சமூகமயப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாகவும் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் மூலம் சலுகைகள் பல ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.*

*அவ்வாறாயினும், மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவு ஆளணி இல்லாத காரணத்தினால் நன்னடத்தையிலுள்ள சிறுவர்களின் சமூகநலன் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு, போசாக்கு, நோய்வாய்ப்பட்ட சிறுவர்களைப் பராமரித்தல், கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப்படல் போன்றே அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்குவதற்கான சிரமம் ஏற்படல் போன்ற மகிழ்ச்சியற்ற நிலைமைகள் அதன்மூலம் உருவாகியுள்ளது.*

*இந்நிலைமையின் கீழ் நன்னடத்தை திணைக்களத்திற்கு அத்தியாவசிய ஊழியர் எண்ணிக்கையினை வழங்குவதற்கு விசேட நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் தற்போது மேற்கொள்ளப்படும் ஆளணி மீளாய்வு முடிவுறும் வரை காத்திராது மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்குத் தேவையான பதவிகளை உருவாக்குவதற்கும் வெற்றிடமாகியுள்ள பதவிகளை நிரப்புவதற்கும் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவது பொருத்தமாகும் என நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.*

***II. 2026 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்***

*2026ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களால் 2025 நவம்பர் 16 ஆந்திகதி அமைச்சரவைப் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டது. அதற்கமைய, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு 2025 நவம்பர் 24 ஆந்திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக முன்வைக்கப்பட்டதோடு, அவை 2025 டிசம்பர் 19 ஆந்திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

***2.1.7. காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்***

*2025 டிசம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுப் பிரிவின் முழுமையான செயலாற்றுகை பின்வருமாறு.*

1. *நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம், 2026 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வுத் திட்டமானது 2025.12.22 ஆந்திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திடமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.*

2. *முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை DMA /1 – 2019 இன் பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் ஜனவரி 31 ஆந்திகதிக்கு முன்னர் ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டு நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.*

3. *அனைத்து உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை.*

4. *2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உட்பிரிவு 40(4) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்மை.*

5. *நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.*

6. *ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மதிப்பீட்டு அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை.*

7. *வருடத்தின் நான்கு காலாண்டுகளுக்கான உள்ளக கணக்காய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளமை.*
   - *முதல் காலாண்டு - 2025.03.21*
   - *இரண்டாம் காலாண்டு - 2025.06.27*
   - *மூன்றாம் காலாண்டு - 2025.09.17*
   - *நான்காம் காலாண்டு - 2025.12.22*

### *2.2. நிதி ஆணைக்குழுவினால் எட்டப்பட்ட விசேடமாக குறிப்பிடப்பட வேண்டிய சாதனைகள்*

#### *I. முன்கூட்டிய திட்டமிடலின் மூலம் 2026 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை காலதாமதமின்றி செயற்படுத்துதல் – 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்புதலை 31.12.2025 ஆந்திகதி பெற்றுக்கொள்ளல்*

*வழமையாக, 2025 ஆம் ஆண்டு வரையில் ஒதுக்கீட்டு சட்ட வரைவானது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே மாகாண சபைகளினது வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை (ADPs) தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டன. இதன் பெறுபேறாக, வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்யும் கூட்டங்கள் மற்றும் அவற்றிற்கு ஒப்புதல் வழங்கப்படும் செயன்முறை பொதுவாக உரிய வருடத்தினது முதல் காலாண்டில் நிறைவு செய்யப்படுவதோடு மாகாண ரீதியிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதை அது தாமதமாகக் காரணமாகியது.*

*இப்பிரச்சனைக்குத் தீர்வாக 2026 ஆம் ஆண்டிற்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை நிதி ஆணைக்குழுவானது, ஒதுக்கீட்டு சட்ட வரைவு பாராளுமன்றத்தினால் அங்கீகரிப்பதற்கு முன்னர், அதாவது 2025 ஒக்டோபர் மாதத்திலேயே பிரதம செயலாளர்களுக்கு வெளியிடப்பட்டது. மாகாண அபிவிருத்தி வழிமுறையினை துரிதப்படுத்துவது மற்றும் மாகாண சபைகளுக்கு கடந்த வருடங்களை விடவும் முன்னதாகவே தமது வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து அவற்றிற்கான ஒப்புதலைப் பெறுவதற்காக 2025 நவம்பர் நடுப்பகுதியாகும் போது நிதி ஆணைக்குழுவிற்கு முன்வைப்பதற்குத் துணைபுரிவதே இதன் நோக்கமாகவிருந்தது.*

*2025.09.17 ஆந்திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட எதிர்வரும் வருடத்திற்கான (2026) ஒதுக்கீட்டு சட்ட வரைவில் மாகாண சபைகள் உள்ளிட்ட அனைத்து செலவின அலகுகளிற்குமான மதிப்பிடப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடு குறிப்பிடப்பட்டிருந்தது. 2026 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீட்டுத் தொகைகள், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 15 ஆவது உறுப்புரைக்கமைய விதிக்கப்பட்டுள்ள "உச்ச எல்லை வரையறையினை" (Binding Ceilings) அடிப்படையாகக் கொண்டுள்ளதால் கடந்த வருடங்களில் போலல்லாது இம்முறை வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்காக ஒவ்வொதுக்கீட்டுத் தொகைகளை மேலும் துல்லியமாக அறிவிக்க முடிந்தது.*

*மேற்குறிப்பிட்ட நிலைமையினை கருத்திற்கொண்டு அவ்வொதுக்கீட்டு சட்ட வரைவில் உள்ள தகவல்களைப் போன்றே பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, 2026 வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக 2026 வருடத்திற்காக வருடாந்த பாதீட்டினால் கிடைக்கப்பெறும் என உறுதிப்படுத்திக்கொள்ளும் மூலதன மானிய நிதித்தொகைகள் (PSDG மற்றும் CBG) பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.*

*இதன் பெறுபேறாக, அனைத்து மாகாண சபைகளுக்கும் 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 2025 நவம்பர் இறுதிக்குள் நிதி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கக்கூடியவாறு இருந்தது. அதற்கமைய, வருடாந்த அபிவிருத்தித் திட்ட மீளாய்வுக் கூட்டங்கள் வெற்றிகரமாக நிறைவுற்று 2025 டிசம்பர் மாதத்திற்குள்ளேயே அதாவது, 2026 நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்குவதற்கு நிதி ஆணைக்குழுவினால் முடிந்தது. திட்டமிடல் மற்றும் ஒப்புதல் வழங்கும் செயன்முறையில் குறிப்பிடதத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியதோடு, 2026 ஆம் ஆண்டில் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய நேரத்தில் செயற்படுத்துவதற்கு மிகவும் துணைபுரிந்தது.*

## *II. நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட முக்கியமான கொள்கை ரீதியிலான தீர்மானங்கள்*

*2025 ஆம் ஆண்டிற்குள் நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற ஆணைக்குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட முக்கிய கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் கீழ்வருமாறு.*

- *2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்கும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குப் பணக் கணக்கின்படி, மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளுக்காக ஒன்பது மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்தளிப்பதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டது.*

- *2025 ஆம் ஆண்டிற்காக மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் பாவனையுடன் மாகாண அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல்கள், பராமரிப்பு செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள், பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழிகாட்டல்கள் மற்றும் மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் பாவனையுடன் மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான வழிகாட்டல்களை மாகாண சபைகளுக்கு வெளியிடுவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல்.*

- *2025 வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாண சபைகளுக்கு மீண்டெழும் நிதி மற்றும் மூலதன நிதித் தொகைகளை ஒதுக்கியளித்தல்.*
- *2026 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்வதற்காக மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.*

- *2026 ஆம் ஆண்டிற்கான மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்வதற்காக மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.*

- *2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்திற்குரிய உரித்தாளர்களுடன் மீளாய்வு மேற்கொள்ளும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்குட்பட்டு அவ்வபிவிருத்தி திட்டங்களுக்காக நிதி*

*ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை மாகாண சபைகளுக்கு அறிவிப்பதற்கு அனுமதி வழங்குதல்.*

- *2025 ஆம் ஆண்டுக்குரிய மாகாணங்களின் பராமரிப்பு செயல்திட்டங்களுக்காக நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை மாகாண சபைகளுக்கு அறியப்படுத்துவதற்கான அனுமதியினை வழங்குதல்.*

- *2026 ஆம் ஆண்டுக்கான மாகாணங்களுக்கிடையே நிதிப்பகிர்வு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில், மாகாணங்களுக்கிடையே நிதிப்பகிர்வு செய்யப்பட வேண்டிய சதவீதங்களுக்கான அனுமதியினை வழங்குதல்.*

- *ஆசிய அபிவிருத்தி வங்கியினது நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படவிருக்கும் "ஒருங்கிணைந்த சுகாதார பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தினை வலுப்படுத்துவதற்கான உலகளாவிய சுகாதார நிகழ்ச்சித்திட்டம் 2025 - 2030" இன் கீழ் மாகாணங்களுக்கிடையே நிதிப்பகிர்விற்காகத் தயாரிக்கப்பட்ட சூத்திரத்திற்கமைய உரிய சதவீதங்களைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கிடையே நிதிப்பகிர்விற்காக சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு பரிந்துரை செய்வதற்கு அனுமதியளித்தல்.*

- *மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படும் கட்டுமான கருத்திட்டங்களில் வேலைத்தளத்தினையொட்டி பொதுமக்களுக்கு இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கணிய அளவுச் சிட்டைகளைக் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாகாண சபைகளினது பிரதம செயலாளர்களுக்கு அறிவிப்பதற்காக அனுமதியினை வழங்குதல்.*

- *Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக செயல்திட்டமொன்றினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடல், மற்றும் அதற்கமைய மாகாண சபைகளினால் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்திற்கான ஒப்புதலை வழங்குதல்.*

- *2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மாகாண மூலதனத் தேவைப்பாட்டினை பொதுத் திறைசேரிக்கு பரிந்துரை செய்து அனுப்புவதற்காக அனுமதியினை வழங்குதல்.*

- *2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மாகாண மீண்டெழும் தேவைப்பாட்டினை பொதுத் திறைசேரிக்கு பரிந்துரை செய்து அனுப்புவதற்காக அனுமதியினை வழங்குதல்.*

- *வருமானமீட்டும் கருத்திட்டங்களுக்காக மீளறவிடப்படாத அடிப்படையில் அரசினால் வழங்கப்படும் 50% பங்களிப்பு நன்கொடைக்குப் பதிலாக வட்டியற்ற அல்லது எளிய வட்டி மீதான கடன் வசதி முறைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண சபைகளுக்கு அறிவிப்பதற்காக அனுமதியினை வழங்குதல்.*

- *2026 ஆம் ஆண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடுவதற்கான அனுமதியினை வழங்குதல்.*

**III.** ***அரசியலமைப்பின் 154ண (4) வின் கீழ் நிதி ஆணைக்குழுவினால் 2026 ஆம் ஆண்டிற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களின் கண்காணிப்பு மற்றும் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் விசேட அறிவுறுத்தல்கள்***

*2026 ஆம் ஆண்டுக்காக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்த 2025.11.16 ஆந்திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கும் கௌரவ ஜனாதிபதி அவர்களின் கண்காணிப்பின் மூலம் தெரிய வருவதாவது, நாட்டின் மொத்த அபிவிருத்தி உபாய மார்க்கத்தினுள் நிதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நன்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது என்பதாகும். கௌரவ ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட கண்காணிப்புக்கள் கீழ்வருமாறு;*

* *கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் அரசாங்க உத்தியோகத்தர்களில் அதிகளவானோர் மாகாண சபைக் கட்டமைப்பின் கீழிருப்பதன் காரணமாக ஒப்பீட்டளவில் அதிகளவு ஊழியர்கள் காணப்படும் பின்புலத்தில் மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் ஒதுக்கீடு போதுமானதாக இல்லாத சிக்கல் தொடர்பாக ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனம் திருப்பப்பட்டுள்ளமை.*

* *2026 ஆண்டிற்கான அரச வரவு செலவுத்திட்டத்தினால் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் மூலதன மானிய நிதியானது, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைவாக உள்ள மாகாணங்களுக்கு நன்மை பயக்கும் விதமாக வளங்கள் பகிரப்படும் வகையில் சமமான பிராந்திய அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் விதம் தொடர்பான சூத்திரமொன்று அரசியலமைப்பின் 154ண (4)(அ) உறுப்புரை பிரகாரம் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மாகாணங்களுக்கு பகிரப்படும் வளங்களின் அளவினை விட கூடிய அளவிலான வளங்கள் அவ்வாறான சூத்திரமொன்றினைப் பயன்படுத்தாது நிரல் அமைச்சுக்களினால் வழங்கப்படும் பின்புலத்தில் அச்சூத்திரத்தினால் கிடைக்கப்பெறும் பயன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை.*

* *கடந்த வருடங்களைப் போலல்லாது, 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீடுகளின் எல்லைகளைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்காக மாகாண சபைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் உரிய திட்டங்களுக்காக 2025.12.31 ஆந்திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவின் ஒப்புதலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால், அவ்வாறான திட்டமிடல் முறைமையொன்று நிரல் அமைச்சுக்களினாலும் பின்பற்றப்படுமாயின், அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகள் இரட்டிப்பின்றி செயற்படுத்த முடிதல் மற்றும் அதன்மூலம் வருடத்திற்குரிய ஒதுக்கீடுகளில் உயர் மட்ட சதவீதமொன்றினைப் பயன்படுத்த முடியுமாவதால், நிரல் அமைச்சுக்களினாலும் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவது உசிதமாக உள்ளமை.*

* *மீளறவிடப்படாத வகையில் நிதியுதவியினை வழங்கும் அடிப்படையில் வாழ்வாதார அபிவிருத்திக்காக அரச நன்கொடைகளை வழங்கும் செயற்பாடு நிதி ஆணைக்குழுவின் உரிய பரிந்துரையினால் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் / குழுக்களுக்காக மாத்திரம் செயற்படுத்துவதற்கும், இலாபமீட்டும் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக வழங்கப்படும் அரசினது நிதிப் பங்களிப்பினை வட்டியற்ற/ எளிய கடன் முறைகளின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதும் உசிதமானது மற்றும் அது தொடர்பாக அமைச்சரவையின் கவனம் திருப்பப்படுவது உசிதமானதாக உள்ளமை.*

* பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான கருத்திட்டங்கள் தொடர்பிலான முன்மொழிவுகளை அபிவிருத்தி தரப்பு நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளும் போது; *(i)* மாகாண சபைகளினது முழுமையான பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல் மற்றும் குறைந்த சிக்கல்களுடைய நிதிப்பாய்ச்சல் முறையொன்றினைப் பயன்படுத்துதல், *(ii)* உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி குறைந்த கிரயத்தின் கீழ் நிர்மாணிக்கக்கூடிய சிறு பரிமாணத்திலான கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளை வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுள் உள்ளடக்காமை, *(iii)* முடிந்தவரையில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு நன்கொடையினை ஈடுசெய்யும் வழிமுறையினை *(Budget support mode)* நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடல், *(iv)* மாகாண கூறுகளுக்குரிய கட்டுமானம் மற்றும் கொள்வனவுகளுக்காக (ஒப்புக்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கையின் கீழ் முன்னெடுப்பதற்கு) மாகாண சபைகளுக்கு இடமளித்தல் ஆகிய விடயங்கள் பால் உரிய கவனம் செலுத்துமாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும், தேசிய பெறுகை திணைக்களத்திற்கும் அறிவுறுத்துவது உசிதமாக அமைகின்றமை.

* 50 மாணவர்களிலும் குறைவானவர்களைக் கொண்ட பாடசாலைகளை அதற்கு அருகாமையிலுள்ள வேறு பாடசாலைகளுக்கு ஒருங்கிணைக்கும் செயற்பாட்டினை கொழும்பு மாவட்டத்தில் இலகுவாக செயற்படுத்த முடியுமென்பதால் அதனை முன்னோடி கருத்திட்டமாக கொழும்பு மாவட்டத்திற்குள் செயற்படுத்துவது உசிதமாகும் எனவும், தேவையென உணரும் மாணவர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவொன்றினை வழங்குவதன் மூலம் அச்செயற்பாட்டினை வலுப்படுத்த முடியும் என்ற நிதி ஆணைக்குழுவின் முன்மொழிவு தொடர்பாக கௌரவ பிரதமர் அவர்களின் மற்றும் கௌரவ கல்வி அமைச்சரின் கவனம் திருப்பப்பட வேண்டியது உசிதமாகும் எனவும்.

* மாகாண சபையின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களின்பால் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருப்பதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறையினால் கருத்திட்டங்களை மதிப்பாய்வு செய்யும் நடவடிக்கை மிகவும் வெற்றிகரமானதாக அமையும் எனத் தெரிய வருவதால், அம்முன்மொழிவினை நிரல் அமைச்சுக்களால் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் தொடர்பிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியமை உசிதமாகும் எனவும்.

* நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களை பராமரிக்கும் போது அத்துறையில் மனித வளம் தொடர்பாக கடுஞ்சிக்கல் உள்ளதாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நன்னடத்தை திணைக்களத்திற்கு அத்தியாவசிய ஆளணியினரை வழங்குவதற்காக விசேட வழிமுறையொன்றினை செயற்படுத்த வேண்டுமெனவும் தற்போது செயற்படுத்தப்படும் ஆளணி மீளாய்வு முடியும்வரையில் இருக்காது மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்குத் தேவையான பதவிகளை ஏற்படுத்தவும் வெற்றிடமாகவிருக்கும் பதவிகளை நிரப்புவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும்.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கமைய கௌரவ ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கமைய, *CP/25/2195/801/027* ஆம் இலக்க *2025.11.24* ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள் கீழ்வருமாறு.

*(i)* நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு, *2026* ஆம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை முன்கூட்டியே திட்டமிடுவதற்காக அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழுள்ள நிறுவனத்

*தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு அமைச்சரவையின் அனைத்து அங்கத்தவர்களிடமும் கோருதல்.*

*(ii)* *வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களுகாக அரச நன்கொடையினை வழங்குவது தொடர்பாக நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு திட்டமிடுவதற்காக உரிய அரச நிறுவனங்களை வழிநடாத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்குதல்.*

*(iii)* *பன்முகப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களை திட்டமிடுகையில் நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்குதல்.*

*(iv)* *தமது அமைச்சுக்களின் கீழ் இயங்கும் கருத்திட்டங்களை மதிப்பாய்வு செய்கையில் நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு பொது மக்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உத்தரவு வழங்குதல்.*

*(v)* *நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு கிராமிய பிரதேசங்களில் மற்றும் பெருந்தோட்ட பிரதேசங்களில் பாடசாலை மறுசீரமைப்பு முன்னோடி கருத்திட்டமாக செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவளித்தல்.*

*(vi)* *நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு, நன்னடத்தையிலுள்ள சிறுவர்களின் பராமரிப்பிற்கான ஆளணித் தேவைப்பாடு தொடர்பிலாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவளித்தல்.*

### *2.3. சவால்களும் எதிர்கால கண்ணோட்டமும்*

*இலங்கை கடந்த காலங்களில் முகங்கொடுத்த கொவிட் – 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார சீர்குலைவின் பின்னர், 2025 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் முகங்கொடுக்க நேரிட்ட 'தித்வா'('Ditwah') புயலினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு நிலைமைகளின் காரணமாக மீண்டும் சமூக பொருளாதார சிக்கல்கள் பலவற்றிற்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக, கடந்த வருடத்தில் ஏற்பட்ட அவ்வியற்கை அனர்த்தம் காரணமாக மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகிய மாகாணங்கள் சிலவற்றின் பொதுமக்களின் வாழ்க்கை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளதுடன், ஏனைய மாகாணங்களும் குறிப்பிட்டளவு அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது.*

*இதன்போது, மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ள விடயங்களுக்காக சமூகப் பொருளாதார சிக்கல்கள் பெரிதளவானவற்றிற்கு தீர்வுகளைத் தேடும் பொறுப்பு மாகாண சபை பொறிமுறைக்கு ஏற்பட்டுள்ளதால், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டினை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசினால் செயற்படுத்தப்படும் தேசிய ரீதியிலான நடவடிக்கைகளுடன் மாகாண சபைகளையும் ஒருங்கிணைத்து தேவையான தலையீட்டினை மேற்கொள்வதற்கு நிதி ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

*சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் நிதி ஆணைக்குழுவினால் அரசின் வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்படும் நிதியானது விஞ்ஞான*

*ரீதியிலான அடிப்படையில் பயன்படுத்தாமையினால் நாட்டினும் சமமான பிராந்திய அபிவிருத்தியினை கிட்டுவது சவாலாக உள்ளது.*

*மேலும், நிதி ஆணைக்குழுவின் தலையீட்டுடன் அனைத்து மாகாண சபைகளினாலும் பொதுவான மாதிரிப்படிவத்திற்கமைய வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டாலும், நிரல் அமைச்சுக்களில் அவ்வாறான திட்டமிடல் பொறிமுறையொன்று செயற்படவில்லை. மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி பொறிமுறையொன்று காணப்படாமை காரணமாக துறையில் மேற்கொள்ளப்படும் ஒரேமாதிரியான செயற்பாடுகள் இரட்டிப்பாதல் மற்றும் மேற்குவிப்பினால் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களினால் உச்சமட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது மற்றும் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன.*

*மாகாண சபைகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட விடயங்களுக்குரிய செயற்பாடுகள் உள்ளடங்கும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களை திட்டமிடுகையில் மற்றும் செயற்படுத்துகையில் பெரும்பாலாக உரிய மாகாண சபை பொறிமுறையினைப் பயன்படுத்தாது நிரல் அமைச்சுக்களினால் கருத்திட்ட அலுவலகங்களைப் பயன்படுத்தி அந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் பெருமளவிலான வள வீண்விரயம் நிகழ்வதோடு, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்துகொள்வதற்காக உதவிபுரியும் வகையில் அந்நிதி முதலீடு இடம்பெறவில்லை.*

*எவ்வாறாயினும், அரசியலமைப்பினால் நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை கிட்டுவதற்காக வழங்கும் பங்களிப்பு மற்றும் தலையீடு அதற்குரிய பொருட்பின்னணியினுள் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு நிதி ஆணைக்குழுவினால் இதிவரும் காலங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

## *அத்தியாயம் - 03: 2025 டிசம்பர் 31ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை*

### *3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று*

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டஒதுக் கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியல்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 119,608,000 | 101,034,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 187,643 | 142,220 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 3,211,051 | 3,998,693 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **123,006,694** | **105,174,913** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **123,006,694** | **105,174,913** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **30,329** | **892,132** | |
| | **தேறிய வருமானக் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **122,976,365** | **104,282,781** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 77,350,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 75,851,291 | 61,617,586 | ஏசீஏ-2(ii) |
| 54,025,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 45,322,924 | 40,101,413 | ஏசீஏ-2(ii) |
| 825,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 544,799 | 613,158 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| **132,200,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **121,719,014** | **102,332,157** | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | ஏசீஏ-2(ii) |
| 400,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 397,319 | 1,666,431 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 400,000.00 | திறன் விருத்தி | 14 | 255,602 | 297,505 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| **800,000.00** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | | **652,921** | **1,963,936** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **109,425** | 142,220 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **4,613,458** | 2,906,189 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **4,722,883** | **3,048,409** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 127,094,818 | 107,344,502 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (4,118,452) | **(3,061,721)** | |
| | **பணிமுற்பண சீராக்கல் கூற்றின்படி மீதி** | | (4,118,452) | (3,061,721) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |

## *3.2. நிதி நிலைமைக் கூற்று*

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 807,456,423 | 807,288,825 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 9,603,550 | 8,201,144 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **817,059,973** | **815,489,969** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 9,525,332 | 8,201,144 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 807,456,423 | 807,288,825 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | - |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 78,218 | - |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **817,059,973** | **815,489,969** |

பக்க இலக்கம் 8 முதல் 28 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 29 முதல் 56 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புக்களின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

……………………
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 16/02/2026

A.T.M.U.D.B.Tennakoon
Secretary
Finance Commission
No. 03, Sarana Mawatha.
Rajagiriya.

……………………
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

……………………
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி : 2026/02/16

Sandya Kumudini Kothalawala
Chief Accountant
Finance Commission
No. 03, Sarana Mawatha, Rajagiriya

## *3.3. காசுப்பாய்ச்சல் கூற்று*

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், மிகை விதிப்புக்கள், தண்டப்பணங்கள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 3,933,413 | 3,139,735 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 119,608,000 | 101,034,000 |
| முற்பணங்களை அறவிடல் | 3,530,165 | 3,826,779 |
| வைப்புக்களின் பெறுகை | 187,643 | 142,220 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **127,259,221** | **108,142,734** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 121,011,614 | 101,537,599 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 544,799 | 613,158 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, மூலதன மாற்றங்கள், திறன் விருத்தி மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 255,602 | 297,505 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 296,675 | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 30,329 | 892,132 |
| முற்பணக் கொடுப்பனவு | 4,613,458 | 2,993,689 |
| வைப்புக் கொடுப்பனவு | 109,425 | 142,220 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **126,861,902** | **106,476,303** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **397,319** | **1,666,431** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 397,319 | 1,666,431 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **397,319** | **1,666,431** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(397,319)** | **(1,666,431)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | - | - |
